# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:15 வள்ளுவர் ஆண்டு 2031 ஐப்பசி 04 வெள்ளிக்கிழமை (20-10-2000) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:260


## ஹெலி சுடப்பட்டது எதனால்?

கொழும்பு,ஒக்.20

நாகர்கோயிலில் எம்.ஐ-24 ரகக் ஹெலிகொப்டர் எந்த வகை ஆயுதத்தால் சுட்டு வீழ்த்தப்பட்டது என்பது குறித்து உடனடியாகத் தெரியவரவில்லை என்று படை அதிகாரிகள் நேற்றிரவு கொழும்பில் தெரிவித்தனர்.

ஏவுகணை மூலமோ அல்லது 'ஒலிகன்' போன்ற நீண்ட தூர ஆயுதத்தாலோ ஹெலி சுடப்பட்டிருக்கக் கூடிய சாத்தியம் உண்டு என்றும்-

ஹெலியின் பிரதான பகுதிகளில் ஒன்று தாக்குதலுக்கு உள்ளானதன் காரணமாகவே அது தீப்பற்றி எரிந்து வீழ்ந்திருக்க வேண்டும் என்றும் -அந்த அதிகாரிகள் மேலும் கூறினர் (அ-3)

## பி.பி.சி. செய்தியாளர் நிமலராஜன் வீட்டில் வைத்துச் சுட்டுக்கொலை!

யாழ்ப்பாணம்,ஒக்.20

யாழ்ப்பாணத்தின் பிரபல பத்திரிகையாளரும் பி.பி.ஸியின் செய்தியாளருமான மயில்வாகனம் நிமலராஜன் நேற்றிரவு பத்து மணியளவில் அவரது வீட்டில் வைத்து ஆயுதபாணிகளால் கொல்லப்பட்டார்.

அவர் மீது நடத்தப்பட்ட துப்பாக்கி, கிரனேட் தாக்குதல்களில் அகப்பட்ட அவரது தந்தை, தாய், மருமகன் ஆகியோர் காயமுற்று யாழ்.ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

இந்தச் சம்பவம் பற்றி தெரிய



வருவதாவது :-

யாழ்ப்பாணம் கச்சேரியடியில் உள்ள இல்லத்தில் நேற்றிரவு பத்து மணியளவில் நிமலராஜனும் அவரது தகப்பனும், தாயும் பி.பி.ஸி. தமிழோசை நிகழ்ச்சியைக் கேட்டுக்

(10ஆம் பக்கம் பார்க்க)

# நாகர் கோயில் பகுதியில் நேற்றுக் கடும் சண்டை!

## ஹெலி சுட்டு வீழ்த்தப்பட்டது!!

யாழ்ப்பாணம்,ஒக்ரோபர்20

**நாகர்கோயில் பகுதியில் நேற்று மாலை அரசாங்கப் படைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கடும் சண்டை மூண்டது. நேற்றுப் பிற்பகல் 5.30 மணியளவில் நாகர்கோயில் படைத்தளம் மீது விடுதலைப் புலிகள் கடும் தாக்குதலைத தொடுத்தனர் என்றும் அதனைத் தொடர்ந்து இரு சாராருக்கும் இடையில் மோதல்கள் உக்கிரமடைந்ததாகவும் களமுனைச் செய்திகள் தெரிவித்தன.**

**இந்தச் சண்டையின் போது படையினருக்கு உதவியாகத் தாக்குதலில் ஈடுபட்ட 'எம்.ஐ-24' ரக ஹெலிகொப்டர் ஒன்று விழ்ந்து நொறுங்கியது. அதனை விடுதலைப் புலிகள் சுட்டு வீழ்த்தினர் என்று இராணுவத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.**

நேற்றைய சண்டையின்போது மூன்று பங்கர்களைப் படையினர் இழந்திருந்தனர் என்றும் -

எனினும் நேற்று இரவு 8.30 மணியளவில் அவை மீண்டும் படையினரின் வசம் கொண்டுவரப்பட்டது என்றும் -

முதலில் இடம்பெற்ற சண்டையில் 15 படையினர் காயமடைந்ததாகத் தகவல் கிடைத்துள்ளது என்றும் -

இராணுவப் பேச்சாளர் சனத் கருணரத்னா நேற்று இரவு தெரிவித்தார்.

இந்தச் சண்டையின்போது படையினருக்கு உதவியாக இரண்டு ஹெலிகொப்டர்கள் பணியில் ஈடுபட்டிருந்தன. அவற்றில் ஒன்றே சுடப்பட்டு தீப்பற்றி எரிந்தபடி படையினரின் கட்டுப்பாட்டுப்பகுதிக்குள் வீழ்ந்து

(10ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் மேலும் 22 குண்டுதாரிகள்

கொழும்பு,ஒக்.20

கொழும்பு நகரினுள் மேலும் 22 தற்கொலைக் குண்டுதாரிகள் ஊடுருவி உள்ளனர். அவர்களைத் தேடும நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டுள்ளன.

இவ்வாறு கொழும்பு மாவட்டப் பொலீஸ் மா அதிபர் போதி லியனகே நேற்றுக் கூறினார்.

நேற்று இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலை அடுத்து செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத்தாக்குதல் சம்பவம் தொடர்பாக இதுவரை ஐந்து சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் அவர் கூறினார்.

குண்டு வெடிப்புச் சம்பவத்தை அடுத்து அப்பகுதியைச் சுற்றி வளைத்து தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்ட பொலீஸார் இவர்களைக் கைதுசெய்தனர் என்றும் அவர் தெரிவித்தார். (இ-8)

## இன்று கப்பல் சேவை

யாழ்ப்பாணம்,ஒக்.20

நேற்றுமுன்தினம் காலநிலை சீரில்லாததால் ரத்துச்செய்யப்பட்ட "சிற்றி ஒவ் றிங்கோ" பயணிகள் கப்பல் சேவை இன்று இடம்பெறவுள்ளதாக யாழ்.சிவில் நிர்வாக அலுவலகம் அறிவித்துள்ளது.

இந்தச்சேவையில் பயணம் செய்வதற்காகப் பயணச்சீட்டு பெற்றவர்கள் இன்று காலை 7 மணிக்கு யாழ்.சிங்கள மகாவித்தியாலயத்துக்கு பயண ஏற்பாடுகளுடன் சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

நேற்று மாலை 5 மணியளவில் திருகோணமலையில் இருந்து இந்தக்கப்பல் பருத்தித்துறை நோக்கிப் புறப்பட்டதாக திருமலை பிரதேச செயலர் வேலும்மயிலும் தெரிவித்தார். (இ-3)

## கொழும்பு நகர மண்டபத்துக்குச் சமீபமாக நேற்று தற்கொலைக் குண்டுத் தாக்குதல்!

கொழும்பு,ஒக்.20

கொழும்பு நகர மண்டபத்துக்குச் சமீபமாக இராமநாயக்க வீதியில் நேற்றுக் காலை 10 மணியளவில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவரும், பொதுமகன் ஒருவரும் உயிரிழந்தனர்; இரு பொலீஸார் உட்பட 21 பேர் காயமடைந்தனர்.

தற்கொலைத் தாக்குதல் நடத்திய இளைஞனும் அந்த இடத்தில் உயிரிழந்தார்.

சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:-

நகர மண்டபத்துக்குச் சமீபமாக இராமநாயக்க வீதியில் சந்தேகத்துக்குரிய முறையில் நடமாடிய இருவரை நோட்டமிட்ட, அமைச்சர்களுக்குப் பாதுகாப்பு வழங்கும் பிரிவினர் அவர்களை விசாரித்ததாகவும் -

அச்சமயம் அந்தப் பகுதியை நோக்கி ஒரு பொலீஸ் ஜீப் வந்துகொண்டிருந்ததாகவும் - அதைக் கண்டதும் அந்த இருவரும் ஓடினர் என்றும் - அவர்களைத் துரத்திச் சென்ற பொலீஸாரிடம் அகப்படுவதைத் தவிர்ப்பதற்காக அவர்களில் ஒருவர் குண்டை வெடிக்க வைத்ததாகவும் - தெரிவிக்கப்பட்டது. மற்ற இளைஞன் தப்பிவிட்டார்.

இந்தக் குண்டு வெடிப்பில் குண்டுதாரியான இளைஞன் உட்பட மூவர் கொல்லப்பட்டனர்; 21 பேர் காயமடைந்தனர்; அவர்களில் மூன்று அமெரிக்க நாட்டவர்களும் அடங்குவர்.

இந்தத் தாக்குதலை நடத்தியவரின் தலை துண்டிக்கப்பட்ட நிலையில் காணப்பட்டதாகவும் -

(10ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர்கள் மூவர் அமைச்சர்கள்

கொழும்பு,ஒக்.20

பொது மக்கள் ஐக்கிய முன்னணியின் புதிய அமைச்சரவையில் மூன்று தமிழர்கள் அங்கம் வகிக்கின்றனர்.

வெளியுறவு அமைச்சராக லக்ஷ்மன் கதிர்காமரும் -

வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு புனர்நிர்மாணம், வடக்கு - கிழக்கு தமிழ் விவகார அமைச்சராக டக்ளஸ் தேவானந்தாவும் -

(10ஆம் பக்கம் பார்க்க)

## ரெலோவின் ஆயுதங்கள் படையினரால் பறிமுதல்

### முதல்வர் சிறிகாந்தா கடும் கண்டனம்

வவுனியா,ஒக்.20

வடக்கிலும் கிழக்கிலும் உள்ள ரெலோ அமைப்பின் முகாம்கள் மற்றும் அலுவலகங்கள் நேற்று படையினரால் சுற்றிவளைக்கப்பட்டு அங்கிருந்த ஆயுதங்கள் அனைத்தும் எடுத்துச் செல்லப்பட்டுள்ளன.

வவுனியாவில் வைரவபுளியங்குளம் முகாம், சிறுவர் பூங்காவுக்கு அருகில் உள்ள முகாம், உக்கிழாங்குளம் முகாம், குருமண்காடு முகாம், செட்டிகுளம் முகாம் ஆகியவை சுற்றிவளைக்கப்பட்டு அங்கிருந்த ஆயுதங்கள் அனைத்தும் எடுத்துச் செல்லப்பட்டன.

மட்டக்களப்பில், மட்டக்களப்பு நகர், ஆரையம்பதி, செங்கலடி ஆகிய இடங்களில் உள்ள முகாம்களும் மன்னாரில் உள்ள முகாமும் சுற்றி

(10ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் வர்த்தகர் கைது

வவுனியா,ஒக்.20

வவுனியாவில் பிரபல வர்த்தகர் ஒருவர் இராணுவ புலனாய்வுத் துறையினரால் நேற்று கைது செய்யப்பட்டார்.

வவுனியா வர்த்தக சங்க உபதலைவரும் சிவசக்தி வியாபார நிலைய உரிமையாளருமான கே. சண்முகராஜா என்பவரே கைதானவர் ஆவார்.

வாகனம் ஒன்றில் எடுத்துச் செல்லப்பட்ட பாக்கு மூடைகளில் வெடிமருந்து இருந்ததாகவும் இதனை அடுத்தே இவர் கைதானதாகவும் பொலீஸார் தெரிவித்தனர். இவருடன் மொத்தம் ஐவர் கைதாகி உள்ளனர். (இ-8-9-164)

## புதிய அமைச்சரவையில் 44 உறுப்பினர்கள்

கொழும்பு,ஒக்.20

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசின் 44 பேர் கொண்ட அமைச்சரவை நேற்றுப் பதவி ஏற்றது. நேற்றுக் காலை அலரி மாளிகையில் இடம்பெற்ற வைபவம் ஒன்றில் அவர்கள் சத்தியப்பிரமாணம் செய்தனர். கிழக்கு மாகாண கிராம வீடமைப்பு, புனர்வாழ்வு, அபிவிருத்தி அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள பேரியல் அஷ்ரப் தமது கணவரின் மரணம் தொடர்பாக 'இத்தா' அனுஷ்டிப்பதால் அவர் தவிர்ந்த ஏனையோர் நேற்று பதவி ஏற்றுக கொண்டனர்.

**புதிய அமைச்சர்கள் விவரம் வருமாறு:-**

- ★ ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க - நிதி, திட்டமிடல், பாதுகாப்பு
- ★ பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்க - புத்த சாசனம், மதவிவகாரம், பெருந்தோட்டத்துறை
- ★ டி.எம்.ஜெயரத்ன - விவசாயம்
- ★ எஸ்.பி.திஸநாயக்க - சமுர்த்தி, கிராம அபிவிருத்தி

(10ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## மானச சஞ்சாரம்

22.10.2000 ஞாயிறு காலை 10 மணி
கைலாசபதி கலையரங்கம்
(C/13471)


# வாழ்த்துகின்றோம்

1961ஆம் வருடம் முதல் 39 வருடங்கள் அரச சேவையில் பணியாற்றி தமது 60 ஆவது அகவையை நிறைவு செய்து இன்று 20 ஆம் திகதி ஓய்வுபெறும் யாழ். சுகாதார சேவை பிரதி மாகாணப் பணிப்பாளர் பணிமனை நிர்வாக உத்தியோகத்தர்

**செல்வத்துரை மகேந்திரன்**

அவர்களை சகல நலன்களும் பெற்று சிறப்புடன் நீடூழி வாழ வாழ்த்துகின்றோம்.

மருந்துக் கலவையாளர்கள்

(79664)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

2000 ஆண்டு தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த யா/தேவரையாளி இந்துக் கல்லூரி மாணவனும் ஜெகசோதி - ராணி தம்பதிகளின் அன்புப் புதல்வனுமாகிய



**செல்வன் கேசவன் - 151 புள்ளிகள்**

பெற்றமைக்காக அவரை வாழ்த்துவதுடன் அவரின் கல்விக்கு வழிகாட்டிய கல்லூரி அதிபர் திரு ம. குட்டித்தம்பி, ஆசிரியை திருமதி சிவாஜினி மற்றும் ஆசிரியை செல்வி சிவசக்தி, ஸ்ரடி சேக்கிள் கல்வி நிறுவனத்தினர் அனைவருக்கும் எமது பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

பிருந்தன் மணப்பந்தல் சேவை,
முகிலன் கொம்யுனிக்கேசன்,
மாசிலா கொம்யுனிக்கேசன்,
மாசிலா அச்சகம் (நெல்லியடி)
ஸ்ரீராம் கொம்யுனிக்கேசன், (கம்பர்மலை)

கொற்றாவத்தை,
வல்வெட்டித்துறை.
(79638)

# பிறந்தநாள் வாழ்த்தும் பாராட்டும்



**செல்வன் செ.சுதர்ஸ்மன்**

துரை அகம் அல்வாய் தெற்கைச் சேர்ந்த செல்வநாதன் - யோகமாலா தம்பதிகளின் தவப்புதல்வன் செல்வன் சுதர்ஸ்மன் தனது பத்தாவது பிறந்தநாளை இன்று (20. 10. 2000) வெள்ளிக்கிழமை தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார். அவரை அப்பா, அம்மா, பவா மற்றும் உற்றார், உறவினர்கள் ஆலடி பாலகணபதி அருள் பெற்று பல் கலையும் கற்று பல்லாண்டு காலம் சிறப்புற வாழ்கவென வாழ்த்துவதோடு

அவர் யா/நெல்லியடி அ.மி.த.க. பாடசாலையில் 5ஆம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் 155 புள்ளிகள் பெற்றமைக்காகவும் மாணவனைப் பயிற்றுவித்த அதிபர், வகுப்பாசிரியர், ஆசிரியர்கள், வதிரி கோ. லோகநேசன ஆசிரியர் ஆகியோர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பெரியப்பா ந. நடராஜலிங்கம்,
பெரியம்மா ந. இரத்தினமாலா,
மாமா ஐ. உதயரத்தினம்

"துரை அகம்"
அல்வாய் (79665)

## மீண்டும் போலியோ சொட்டு மருந்து

நாடெங்கிலும் 5 வயதுக்குட்பட்ட பிள்ளைகளுக்கு போலியோ (இளம்பிள்ளை வாதம்) நோய்த் தடுப்பு மருந்து கொடுக்கும் சுகாதார அமைச்சின் திட்டத்தின் கீழ இவ்வருடத்திற்கான தடுப்பு மருந்து எதிர்வரும் 28ஆம் திகதி சனிக்கிழமையும் டிசம்பர் மாதம் 2ஆம திகதி சனிக்கிழமையும் யாழ். மாவட்டத்தில் வழங்கப்படவுள்ளது.

இதன் பிரகாரம் எதிர்வரும் 28ஆம் திகதி சனிக்கிழமை காலை 8மணி முதல் பி.ப. 4 மணி வரை யாழ்.மாவட்டத்தில் உள்ள சகல சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளிலும் குறிப்பிட்ட நிலையங்களில் வைத்து இந்தப் போலியோ நோய் தடுப்பு மருந்து வழங்கப்படவுள்ளது.

இதற்கான சகல ஒழுங்குகளும் யாழ்.சுகாதார சேவை பிரதி மாகாணப் பணிப்பாளரினால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இம் மருந்து கொடுக்கும் திட்டத்தை கடந்த வருடங்களைப் போல இம்முறையும் உரிய முறையில் நடைமுறைப்படுத்துவதற்கு சகலரும் தமது பூரண ஒத்துழைப்பை வழங்கி உதவ வேண்டும் என்றும் சுகாதாரத் திணைக்களம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

சுகாதார சுதேச வைத்தியத் துறை அமைச்சு, உலக சுகாதார ஸ்தாபனம், 'யுனிசெப்' ரோட்டறிக் கழகம் ஆகியவற்றின அனுசரணையுடன் இப் போலியோத் தடுப்பு மருந்து வழங்கும் திட்டத்தை செயற்படுத்தி வருவது குறிப்பிடத்தக்கது.(ஐ-135)


அளவையியல்
பகுதி II ஆரம்பம்
2001 A/L
சனி, ஞாயிறு பி.ப. 4மணி
திரு.எஸ்.சயந்தன்
வாணி
சுன்னாகம்.
(79675)



நாளை ஆரம்பம்!
A/L 2001
'வருமானம் செலவுக் க/கு'
மாலை - 4 மணி
A/L 2002
'நட்டஈட்டுக் கோரிக்கை'
மாலை - 3 மணி
பிரத்தியேகம்
76/2, கோயில் வீதி,
யாழ்ப்பாணம்.
கணக்கீடு
D.SAM
(C/13470)



ராஜா
(யாழ்ப்பாணம்)
விஜய், ஜோதிகா,
விஜயகுமார் மற்றும்
பலரின் நடிப்பில்
குஷி
காட்சிகள்:
10.30, 2.00 (பி.நே.)
(C/13461)



நாகம்மஸ்
சுன்னாகம்
பிரசாந்த், ரம்பா,
லிவிங்ஸ்டன்,
ராதாரவி நடித்த
பூமகள் ஊர்வலம்
(ரீஸ்)
காட்சிகள்: 11.00, 2.30 (பி.நே.)
(79676)


# முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



செல்வசேகரம் - பாலினி தம்பதிகளின்
செல்வப்புதல்வி

**செல்வி கரனிகா**

தனது முதலாவது பிறந்தநாளை இன்று (20. 10. 2000) வெள்ளிக்கிழமை வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார். கரனிகாவை அப்பா, அம்மா, அண்ணா துஷிதன், கீர்த்திகன், கோப்பாய் அப்பப்பா, அப்பம்மா, அம்மம்மா, பெரியப்பா, பெரியம்மா, சித்தப்பா, சித்தி, அத்தை, சுவிஸில் உள்ள பெரியப்பா, பெரியம்மா, அண்ணாமார், சாந்தன் மாமா, ஹொலண்டில் உள்ள பெரியமாமா மற்றும் உற்றார், உறவினர் அனைவரும் பல்கலையும் கற்று பல்லாண்டு சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர்.

அன்பு அப்பா
த.செல்வசேகரம்

53, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். (79637)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

வடக்குப் புனர்வாழ்வு, புனரமைப்பு, அபிவிருத்தி அமைச்சராக பதவி ஏற்றிருக்கும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி செயலாளர் நாயகம் கௌரவ கே.என்.டக்ளஸ் தேவானந்தா அவர்களை வலிகாமம் மேற்கு பிரதேசசபை மக்கள் உட்பட வட்டுக்கோட்டைத் தொகுதி மக்களும் நாமும் மனமாரப் பாராட்டுகின்றோம்.



ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் சேவை தொடர்ந்தும் நிலைக்க வட்டுக்கோட்டைத் தொகுதி மக்கள் வழங்கிய ஆதரவுக்கு உளப்பூர்வமான நன்றியைப் பக்தியுடன் தெரிவிக்கின்றோம். எமது ஒவ்வொரு சேவையும் மக்கள் ஆலோசனையுடன் முன்னெடுத்துச் செல்லப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம். எமது சேவையை குழப்ப நினைத்து தங்களால் இயன்ற பல வழிகளில் அவதூறுகளையும் கட்டுக்கடங்காத கற்பனைக் கதைகளையும் அள்ளி வீசியவர்களை மக்கள் இனங்கண்டு நிராகரித்துள்ளனர். இவர்கள் இனிவரும் தேர்தல் காலங்களிலேயே மக்கள் முன் தோன்றுவார்கள். அமைச்சரின் துணிச்சல் மிக்க சேவை தமிழ் பேசும் மக்களுக்கு இடைவிடாது தொடர எல்லாம் வல்ல வழக்கம்பரை முத்துமாரி அம்பாளின் அருள் பாலிக்க வேண்டுகின்றோம்.

வே.மகேந்திரன்,
உப தலைவர்,
வலிகாமம் மேற்குப்
பிரதேச சபை,
சுழிபுரம்.

ந.திரிலோகநாதன்,
தலைவர்,
உறுப்பினர்கள், செயலாளர், ஊழியர்கள்,
வலிகாமம் மேற்குப் பிரதேச சபை,
சுழிபுரம்.

(C/13472)

# ஒத்துழைப்பு நல்குக

**காரைநகர் மணற்காடு**

**கும்பநாயகி முத்துமாரி அம்பாள் கோயில்**

மேற்படி ஆலயத்தின் பெறுநராக (RECEIVER) ஊர்காவற்றுறை மாவட்ட நீதிமன்றினால் நியமிக்கப்பட்டிருக்கும் ஊர்காவற்றுறை மாவட்ட நீதிமன்றப் பதிவாளர்

**திரு. வேலுப்பிள்ளை நடராசா**

அவர்களின் நிர்வாகத்தின் கீழ் ஆலயப் பணிகள் சிறப்புற நிகழ சகல அடியவர்களும், திருவிழா உபயகாரர்களும் பூரண ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

வை. கா. தவராசன்,
முறைப்பாட்டுக்காரர் சார்பில்

(79621)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை
தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2000

**செல்வி நிசாந்தினி சதாசிவம்**

சித்தியடைந்த மேற்படி மாணவியையும், வெட்டுப்புள்ளிக்கு அண்மித்த புள்ளிகளைப் பெற்ற மாணவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்

(C/13465)

### மக்கள் இடர் நீங்க

# தீபாவளியை பிரார்த்தனை நாளாக அனுஷ்டியுங்கள்!

### இந்து சமயப் பேரவை வேண்டுகோள்

யாழ்ப்பாணம்,ஒக்.20

எமது மக்கள் பல்வேறு விதமான இடர்களுக்குள் சிக்குண்டுள்ள இவ்வேளையில் தீபாவளி தினத்தை இம்முறை பிரார்த்தனை நாளாக அமைத்து அன்றைய தினம் அனைத்து ஆலயங்களிலும் பிரார்த்தனைகளில் ஈடுபடுமாறு கோருகிறோம்.

யாழ். இந்து சமயப் பேரவை மேற்கண்டவாறு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பாக பேரவை விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

போர் காரணமாகத் தமது பெற்றோரை இழந்தும் பிள்ளைகள், உறவினரை இழந்தும் தமது வீடுகள், சொத்துக்கள் அழிக்கப்பட்டும் அகதி முகாம்களிலும், தெருவோரங்களிலும் மிகுந்த வேதனையோடு வாழும் இந்நேரத்தில் தமிழ் மக்கள் இம்முறை தீபாவளி தினத்தை பிரார்த்தனை நாளாக அமைத்து அன்றைய தினம் எமது மக்களின் விடிவிற்காக எல்லா ஆலயங்களிலும் பிரார்த்தனைகளில் ஈடுபடுமாறு பேரன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

சகல ஆலயங்களிலும் காலை 6 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரை விசேட பூஜை வழிபாடுகளையும், பிரார்த்தனைகளையும் நடத்துவதற்கு ஏற்ற ஒழுங்குகளை ஆலய தர்மகர்த்தாக்களும், பரிபாலன சபையினரும் சம்பந்தப்பட்ட அனைவரும் மேற்கொள்ளுமாறு மிகுந்த பணிவன்போடு கேட்டுக் கொள்கின்றோம்.

மேலும் வீடுகளுக்கு அருகிலுள்ள அகதி முகாம்களுக்குச் சென்று அங்குள்ள ஏழைகளுக்கும், குழந்தைகளுக்கும் தம்மால் இயன்ற புதிய உடுபுடைவைகள், இனிப்புப் பண்டங்கள் வழங்கி உற்சாகப்படுத்துமாறும் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம். எமது பேரவை எல்லா மக்களும் கலந்துகொள்ளும் பூசை வழிபாடுகளையும் பிரார்த்தனைகளையும் சுன்னாகம் கதிரமலைச் சிவன் கோயிலில் காலை 6.00 மணி தொடக்கம் நடத்த ஒழுங்கு செய்துள்ளது என்பதையும் அறியத் தருகின்றோம் - என்று உள்ளது.

(ஐ)

# 40 ஆண்டுகளின் பின் முதல் முறையாக எதிர்க் கட்சித் தரப்பு சபாநாயகர் தெரிவு

கொழும்பு,ஒக்.20

இலங்கையின் அரசியல் வரலாற்றில் 40 வருடங்களுக்குப் பின்னர் எதிர்க்கட்சியைச் சேர்ந்த ஒருவர் சபாநாயகராகத் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்.

நேற்று முன்தினம் ஏகமனதாக சபாநாயகராகத் தெரிவு செய்யப்பட்ட அநுரா பண்டாரநாயக்காவுக்கு முதல் எதிர்க்கட்சியைச் சேர்ந்த சபாநாயகராக பதவி வகித்த எதிரணியைச் சேர்ந்தவராக டி.பி.சுபசிங்க விளங்கினார்.

1960 மார்ச்சில் நடைபெற்ற பொதுத் தேர்தலின் பின்னர் டட்லி சேனநாயக்கா பிரதமராக பதவி வகித்த காலகட்டத்திலேயே சம சமாஜக்கட்சியிலிருந்த டி.பி.சுபசிங்க கட்டுகம்பளைத் தொகுதியில் சுயேச்சையாகப் போட்டியிட்டு வெற்றியீட்டி சபாநாயகராகத் தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

ஆனால் அவர் அந்தப் பதவியை 21 நாள்களே வகித்தார். (1960 மார்ச் 30 - 1960 ஏப்ரல் 21)

சுதந்திர இலங்கையின் 4ஆவது நாடாளுமன்றமாக அது அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

அநுரா பண்டாரநாயக்காவை சபாநாயகராகத் தெரிவு செய்வதற்கு ஐக்கிய தேசியக் கட்சி மேற்கொண்ட முயற்சிக்கு பொதுமக்கள் ஐக்கிய முன்னணி ஒத்துப் போனதற்குக் காரணம் சபாநாயகர் பதவிக்கு இரகசிய வாக்கெடுப்பு மூலம் போட்டியொன்று ஏற்படுமிடத்து நாடாளுமன்றம் கூடும் முதல் நாளே ஏற்படக் கூடிய அசெளகரியத்தை தவிர்க்கவே அரசு இதனை ஏற்றுக் கொண்டதாகத் தெரியவருகிறது.

(ஐ)



யாழ்.மேலதிக மகாணக் கல்விப் பணிமனை உத்தியோகத்தர் பா.சிவபாலனின் 'நகை' கவிதைத் தொகுதி வெளியீட்டு விழா அண்மையில் யாழ்.இந்துக் கல்லூரியில் நடைபெற்றது. நூலின் முதற் பிரதியை கலாநிதி காரை சுந்தரம்பிள்ளையிடமிருந்து பி.ஜே.பெர்ணாண்டோ ஸ்தாபன உரிமையாளர் ஆ.ஜெயக்குமாரன் பெற்றுக் கொள்கிறார்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். மேலதிக மகாகாணக் கல்விப் பணிப்பாளர் கலாநிதி ச.நா.தணிகாசலம்பிள்ளையும் சிறப்புப் பிரதியைப் பெற்ற எஸ். பாலசுப்பிரமணியமும் படத்தில் காணப்படுகின்றனர். *(படம்: குருநகர் செய்தியாளர்)*

### சாரணர் பாசறை

காங்கேசன்துறை மாவட்ட சாரணர் பாசறை விழா இன்று முதல் மூன்று தினங்களுக்கு மருதனார் மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

அணிநடை, பாசறைப் பரிசோதனை, மைதானக் காட்சி, நிலைக் காட்சி, தீப்பாசறை குழுப்பதிவேடு, சமூக சேவை, மாவட்ட செயற்பாடு போன்ற பல நிகழ்வுகளில் போட்டிகள் நடைபெறும். பாசறைப் பதியாக மாவட்ட ஆணையாளர் ந.செளந்தரராஜன் செயற்படுவார்.

(ஐ-152)

# வேட்பாளரின் தோல்வியை தாங்காத யுவதி தற்கொலை!

கொழும்பு,ஒக்.20

தொழில் பெறும் எண்ணத்துடன் தனது வேட்பாளருக்காக கடந்த தேர்தலில் இரவு பகலாக வேலை செய்த இளம் பெண் ஒருவர் அவரது வேட்பாளர் தோல்வி அடைந்ததை அடுத்து நஞ்சு அருந்தித் தற்கொலை செய்து கொண்டார்.

இச்சம்பவம் அம்பாறை தியன்கல என்ற இடத்தில் நடைபெற்றுள்ளது.

கீதா கொலம்பகே(வயது23) என்பவரே இவ்வாறு தற்கொலை செய்து கொண்டவராவார். இவர் கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்தவர் என்றும் திகாமடுல்ல மாவட்டத்தில் போட்டியிட்ட ஒரு வேட்பாளரின் வெற்றிக்காக பாடுபட்டு, அதன் மூலம் தான் தொழில் வாய்ப்பொன்றை எதிர்பார்த்திருப்பதாகத் தனது தோழிகளிடம் கூறியிருந்தார் என்றும் மரண விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

நச்சு விதையை உண்டதால் மரணம் சம்பவித்ததென மரண விசாரணை அதிகாரி தீர்ப்பு வழங்கினார்.

(ஐ-4)

# இருப்பிட வசதி கோரி எம்.பிக்கள் விண்ணப்பம்

கொழும்பு,ஒக்.20

புதிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருப்பிட வசதி கோரி நாடாளுமன்றச் செயலாளர் நாயகத்துக்கு விண்ணப்பங்களை அனுப்பி வைத்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

தேர்தலில் தோல்வியடைந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் தொடர்ந்து தமது அரச விடுதிகளில் தங்கியிருப்பதே இதற்குக் காரணம் ஆகும்.

அவர்கள் தமது விடுதியில் இருந்து வெளியேறிய பின்னர் புதிய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அவை பெற்றுக்கொடுக்கப்படும் என்று நாடாளுமன்ற உதவி செயலாளர் நாயகம் தெரிவித்தார்.

விடுதிகளைக் காலி செய்து விட்டு வெளியேறுமாறு தேர்தலில் தோல்வி அடைந்த உறுப்பினர்களுக்கு அறிவிக்கப்பட்டிருப்பதாக நாடாளுமன்ற உதவிச் செயலாளர் நாயகம் மேலும் தெரிவித்தார்.(இ-8)

### தென்மராட்சி வலயத்துக்குரிய

# நான்கு பாடசாலைகள் இணைந்து இயங்கும்

தென்மராட்சி,ஒக்.20

- தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த நான்கு பாடசாலைகள் வடமராட்சி வலயத்தில் உள்ள சில பாடசாலைகளுடன் இணைந்து செயற்படவுள்ளன.

இப்பாடசாலைகளின் ஆசிரியர்கள், மாணவர்கள் புதிய பாடசாலைகளில் இணைந்து கொள்ளலாமென வலயக் கல்விப்பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார்.

மாசார் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையுடனும் - வல்வெட்டி இந்து தமிழ் கலவன் பாடசாலையுடனும் -

மட்டுவில் கமலாசனி வித்தியாலயம் வல்வை சிவகுரு வித்தியாலயத்துடனும் -

மட்டுவில் வடக்கு அ.த.க.பாடசாலை கெருடாவில் வடக்கு அ.த.க பாடசாலையுடனும் -

எழுதுமட்டுவாழ் அ.த.க. பாடசாலை தொண்டமானாறு வீரகத்திப்பிள்ளை வித்தியாலயத்துடனும் -

இணைந்து இயங்குமென அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முதல் இந்த நடைமுறை அமுலுக்கு வர இருந்தது. (ஐ-117)

### யாழ். ஆஸ்பத்திரியின்

# வெளிநோயாளர் பிரிவில் இருக்கை வசதி இல்லை

யாழ்ப்பாணம்,ஒக்.20

யாழ். போதனா மருத்துவமனை வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெறுவதற்குச் செல்லும் நோயாளர்கள். பெரும் சிரமங்களை எதிர் நோக்கி வருகின்றனர்.

வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெறுவதற்குப் பெரும் எண்ணிக்கையில் நோயாளர் வரும் நாள்களில் நோயாளர் இருப்பதற்கு இருக்கை வசதிகள் அங்கு போதியளவு இல்லை.

பெரும் எண்ணிக்கையில் வரும் நோயாளர்கள் வெளிநோயாளர் பிரிவுக்கட்டடத்தின் வெளிப்புறத்தில் நீண்ட நேரம் நிற்பதைக் காண முடிகிறது.

நிற்க முடியாத நிலையில் இருந்தவர்கள் மரத்தின் கீழும், படிகளிலும் குந்திக் கொண்டிருப்பதையும் காணமுடிகிறது.

(ஐ-10-ரி)

# நெடுந்தீவு மேற்குப்பகுதிக்கும் விரைவில் மின் விநியோகம்

நெடுந்தீவு,ஒக்.20

நெடுந்தீவில் மின்சார விநியோகம் விரைவில் மேற்குப் பகுதிக்கும் விஸ்தரிக்கப்படவுள்ளது.

இதற்கென மின் கம்பங்கள் பல நெடுந்தீவுக்கு எடுத்து வரப்பட்டுள்ளன. மின் வழங்கும் ஜெனரேட்டர் ஏற்கனவே கிடைத்துள்ளது தெரிந்ததே.

மின்சார விஸ்தரிப்புக்கான நடவடிக்கைகளுக்கு யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா நிதி ஒதுக்கீடு செய்திருந்தார்.

(ஐ-111)

# தென்மராட்சி வலயத்துக்கு 20 ஆசிரியர்கள் நியமனம்

தென்மராட்சி,ஒக்.20

தென்மராட்சி க்ல்வி வலயப் பாடசாலைகளில் 15ஆங்கில ஆசிரியர்களும் 4 ஆரம்பக்கல்வி ஆசிரியர் ஒரு விவசாய பாட ஆசிரியர் ஆகியோர் நியமிக்கப்படவுள்ளனர்.

அண்மையில் தென்மராட்சிக் கல்வி வலய அலுவலகத்தில் நடைபெற்ற ஜி.சீ.ஈ. உயர்தர பரீட்சைப் புள்ளிகளின் அடிப்படையில் தமிழ் மொழிமூல தகுதிகாண் ஆசிரியர்களைத் தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சையில் தோற்றியோரிலிருந்து இவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தெரிவானோரின் விவரங்கள் விரைவில் வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

(ஐ-117)

# சிறந்த நோய்த்தடுப்பு மருந்து தாய்ப்பாலே!

### கருத்தரங்கில் தாய்மாருக்கு வலியுறுத்து

"தாய்ப்பாலே ஒரு குழந்தைக்கு நாம் கொடுக்கும் முதல் நோய்த் தடுப்பு மருந்தாகும். தாய்க்கு அவரின் கர்ப்பகாலத்தில் இருந்து போஷாக்குணவும், பிறந்த குழந்தைக்கு நான்கு மாதம் வரை தாய்ப் பாலும் கொடுத்து வந்தால் போதும். பிள்ளை வளர்வதற்கான சகல போஷாக்கும் கிடைத்துவிடும். தாய்ப்பாலில் குழந்தைக்கு தேவையான சகல போஷாக்கும் இருப்பதால் தேகாரோக்கியமுடைய குழந்தையாக வளர்ச்சியடையும்."

வலிகாமம் தெற்கு பிரதேச செயலக -திட்டமிடல் பிரிவினரால் ஏற்பாடு செய்யப்பட்ட போஷாக்கு கல்வி பற்றிய கருத்தரங்குத் தொடரின் முதல்நாள் நிகழ்வில் தாய்ப்பாலின் முக்கியத்துவம் பற்றி கருத்துரை வழங்கிய தெல்லிப்பழை சுகாதார வைத்திய பிரிவை சேர்ந்த அதிகாரி எஸ்.மகாதேவன் மேற்கண்டவாறு கூறினார்.

கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாலயத்தில் தொடர்ச்சியாக நடைபெற்றுவரும் இக்கருத்தரங்கினை வலி.தெற்கு பிரதேச உதவி திட்டமிடல் பணிப்பாளர் த.தேவராஜன் ஆரம்பித்து வைத்தார்.

கந்தரோடை கிராமசேவையாளர் திருநாவுக்கரசுவினால் ஒழுங்கமைக்கப்பட்ட இக்கருத்தரங்கு அதிபர் க.செல்வக்குமாரன் தலைமையில் நடைபெற்றது.

சுமார் ஐம்பது வரையான குடும்ப பெண்கள் இக்கருத்தரங்கில் தினமும் கலந்து கொள்கின்றனர்.

நவம்பர் 3ஆம் திகதிவரை ஒன்பது நாள்கள் நடைபெறும் இக் கருத்தரங்குத் தொடரில் போஷாக்கு சம்பந்தமான பல்வேறு விடயங்களில் கருத்துரைகள் இடம்பெற்று வருகின்றன.

சுகாதார வைத்திய பணிமனை அதிகாரி மகாதேவன் தமது கருத்துரையில் கூறியதாவது:-

இன்று எமது நாட்டில் 60 சதவீத மாணவர்கள் போஷாக்கின்றி காணப்படுவதாகக் கூறப்படுகிறது.

போஷாக்குக் குறைவுக்கு காரணம் உரிய காலத்தில் தாய்ப்பால் போதியளவு ஊட்டப்படாமையே. பல்வேறு காரணங்களால் தாய்ப் பால் ஊட்டப்படுவதில்லை. பாலூட்டும் தாய்மார் வேலைக்கு செல்லல், தாய்க்கு போதிய பலன் இல்லாமை, தாயில் பால் இல்லை என்ற காரணம், தாயின் அழகு குறைந்து விடும் என்ற நம்பிக்கை போன்ற பல காரணங்கள் இருப்பினும் பெரும்பாலும் கூறப்படும் காரணம் தாயில் பால் இல்லை என்பதாகும்.

குழந்தை பால் குடிக்காமல் விடுவதற்கு பல காரணங்கள் இருக்கலாம்.அவற்றை ஆராயாமல் போதிய பால் இல்லாமையால் பிள்ளை பால் குடிக்கவில்லை எனக்கருதி அநேக தாய்மார்கள் புட்டிப்பாலை ஊட்டத் தொடங்குகின்றனர்.

பிள்ளை பெற்றுக் கொள்ளும் மனிதராயினும் சரி மிருகமாயினும் சரி ஒப்பீட்டளவில் குறிப்பிடத்தக்க அளவில் பால் நிறைந்திருக்கும். பிள்ளை தாயின் பாலை உறிஞ்சி குடிக்கும் போது தான் பால் அதிகம் சுரக்கிறது.

தற்காலத்தில் மேற்குலக நாடுகள் தாய்ப்பாலின் முக்கியத்துவம் பற்றி எமக்கு வலியுறுத்தி வருகின்றன. எம்முன்னோர்கள் தாய்ப் பாலை தவறாது வழங்கியமையால் தான் போஷாக்கு மிக்கவர்களாக விளங்கினர். தாய்ப்பாலின் முக்கியத்துவம் பற்றி அவர்களுக்கு யாரும் வலியுறுத்தவில்லை.

தாய்ப்பாலுக்கு பணச் செலவு இல்லை. தயாரிப்புக் கிடையாது. முழு போஷணை கொண்டது. நோய் எதிர்ப்பு சக்தி கொண்டது. பசுப்பால் ஊட்டும் போது ஏற்படும் ஒவ்வாமை தன்மை இதில் இல்லை. புரதச்சத்து நிறைவாக இருக்கிறது. தாய் - பிள்ளையிடையே அன்பு - ஆதரவு ஏற்படுகிறது.

இத்தகைய நன்மைகள் நிறைந்துள்ள தாய்ப்பாலை ஒவ்வொரு தாய்மாரும் குழந்தை பிறந்த நான்கு மாதத்துக்கு தவறாது ஊட்டுதல் அவசியம் - என்று கூறினார்.(ஐ-152)

முன்பள்ளி
## பாலர் ஆசிரியராகப் பயிற்சி

தபால் வழி ஆறுமாதப் பயிற்சி
க.பொ.த. சாதாரண தரம் கடைசித்தகைமை

விபரங்களுக்கு:
பாலர் ஆசிரியர் சங்கம்,
கொக்குவில்.

(79349)



# மலிவு விற்பனை

பிளான்ட் பரடைஸ்
எதிர்வரும் 21 ஆம் திகதி முதல் 29 ஆம் திகதி வரை மலிவு விற்பனை.

✠ குறோட்டன் ✠ சைப்பிரஸ்
✠ பாம்ஸ் ✠ நெசினா
✠ மினிஎக்ஸ்ரோறா ✠ நெபிரொலெடீஸ்

ஆகிய கன்றுகள், பூச்சாடிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

## பிளான்ட் பரடைஸ்

152/2, கோயில் வீதி,
யாழ்ப்பாணம்.
(U.N.D.P. முன்)

கிளை:-
கிஷ்ணா தொலைத் தொடர்பு நிலையம்,
பிரதான வீதி,
சாரையடி,
புலோலி.

(79655)


## நினைவஞ்சலி

### அமரர் குட்டிப்பிள்ளை சின்னத்துரை

வலி. கிழக்குப் பிரதேச சபையில் கடமையாற்றும்
வைத்திய கலாநிதி திருமதி
கி. அருந்தவராணியின்
தந்தையார்

(28-08-2000 அன்று சிவபதமடைந்த)
குட்டிப்பிள்ளை சின்னத்துரையின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

அரசசேவை, அகில இலங்கை
வைத்திய சங்கம்.

(79659)

''ஓம் விராட் விஸ்வப்பிரமனே நமஹ''

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



### கந்தையா சிவப்பிரகாசம்

மலர்வு: 18-07-1932
உதிர்வு: 20-09-2000

எமது குடும்பத்தின் ஒளிவிளக்காய் இருந்து எம்மைப் பாசத்துடன் வழிநடத்திய அன்புத்தெய்வமே! உங்கள் முகத்தை நாம் இனி எங்கு காண்போம்? உங்கள் ஆத்மா சாந்தியடைய நல்லூர்க் கந்தனை வேண்டுகின்றோம்.

இன்று (20-10-2000) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நிகழும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்.

123/2, கோயில் வீதி,
யாழ்ப்பாணம்.

(79673)

## சமய சந்நிதியில்

யாழ்ப்பாணம், ஒக். 20

காரைநகர் திக்கரை முருகன் ஆலயத்தில் இன்று வெள்ளிக்கிழமை காலை சண்முகார்ச்சனையும் தொடர்ந்து சுவாமி வீதி வலம் வருதலும் இடம்பெறும். (ஐ)

## கணக்காளர் பயிற்சி நெறி

அரியாலை, ஒக். 20

யாழ். மாவட்டத்தில் உள்ள பனை தென்னை வள கூட்டுறவு அமைப்புக்களின் கணக்காளர்களுக்கான பயிற்சி நெறி இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். மாவட்டக் கூட்டுறவுத் திணைக்களத்தில் நடைபெறவுள்ளதாக மாவட்ட பனை தென்னை வள கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் சு. கணேசமூர்த்தி அறிவித்துள்ளார். (ஐ-17

## புலமைப் பரிசில் வழங்கும் விழா

யாழ்ப்பாணம், ஒக். 20

வேலணைக் கோட்டத்துக்கு உட்பட்ட பாடசாலைகளின் மாணவர்களுக்கான ஜனாதிபதி புலமைப் பரிசில் வழங்கும் வைபவம் நாளை சனிக்கிழமை மாலை 10 மணிக்கு வேலணை சைவப் பிரகாச வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது. உதவிக் கல்விப் பணிப்பாளர் சோ. தில்லைநாதன் தலைமையில் இடம்பெறும்.

இந்த வைபவத்தில் பிரதம விருந்தினராக தீவகம் தெற்கு பிரதேச செயலர் செ. இரத்தினமும் கௌரவ விருந்தினராக வேலணைப் பிரதேச சபைத் தலைவர் ந. கருணாகர குருமூர்த்தியும், சிறப்பு விருந்தினராக தீவக வலயக் கல்வி அலுவலகக் கணக்காளர் ஏ. தேவஅருள்ராஜாவும் கலந்து கொள்வர் (இ-3)

## சமயப் பரீட்சை

யாழ்ப்பாணம், ஒக் 20

யாழ். மாவட்ட அறநெறிப் பாடசாலைகளின் 2000 ஆம் ஆண்டுக்கான இந்து சமய இறுதிப் பரீட்சைகள் நாளையும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும் காலை 9 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளன. (3-10)

## 2 ஆயிரம் ரூபா கொடுப்பனவு பெறாதோருக்கு...

கோப்பாய், ஒக். 20

தென்மராட்சியிலிருந்து இடம்பெயர்ந்து கோப்பாய் பிரதேசச் செயலர் பிரிவில் வசிப்பவர்களில்இடம்பெயர்ந்தோருக்கான 2 ஆயிரம் ரூபா கொடுப்பனவு பெறாதவர்கள் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு, கிராம சேவையாளரின் அத்தாட்சிக் கடிதம், பங்கீட்டு அட்டை மற்றும் அடையாள அட்டை ஆகியவற்றுடன் கோப்பாய் பிரதேசச் செயலகத்துக்கு சமுகமளிக்குமாறு பிரதேசச் செயலர் கே. கேதீஸ்வரன் கேட்டுள்ளார். (ஐ ஒ-186)

## பனம் விதை நடும் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஒக். 20

பனை அபிவிருத்திச் சபையும், மானிப்பாய் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கமும் இணைந்து வலிகாமம் தென்மேற்கு பிரதேசத்தில் புத்தாயிரமாண்டு பனை விதை நடும் திட்டத்தை மேற்கொள்ளவுள்ளன.

இதற்கான ஆரம்ப நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு மாகியப்பிட்டிப் பகுதியில் வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபைத் தலைவர் வெலிச்சோர் அன்ரன் ஜோன்சன் தலைமையில் நடைபெறும். (ஐ-17)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சிவகுரு அபிராமி

மீசாலையைப் பிறப்பிடமாகவும் தற்போதுநவாலியில் வசிப்பவருமாகிய திருமதி சிவகுரு அபிராமி அவர்கள் நேற்று (19-10-2000) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் சிவகுரு அவர்களின் அன்பு மனைவியும், பேரின்பமூர்த்தி (கனடா), காலஞ்சென்ற கணேசமூர்த்தி மற்றும் விநாயகமூர்த்தி (பிரான்ஸ்), தட்சணாமூர்த்தி(பிரான்ஸ்),நடேசமூர்த்தி(பிரான்ஸ்), நகுலேஸ்வரி (பிரான்ஸ்), கேதீஸ்வரி, கிருஸ்ணமூர்த்தி (கிளிநொச்சி) ஆகியோரின் அன்புத் தாயாரும், சிவா, புவனேஸ்வரி, ராணி, கீதா, தெய்வேந்திரராஜா, ஜெகபாலன் (யாழ். போதனா, வைத்தியசாலை) ஆகியோரின் அன்பு மாமியாரும், நிஷாந்தன், லக்ஸன், லகன், வித்தியா, வினோத், அனுஷியா, கிசோக், ஆரூரன், யதுசன், கார்த்திக், சந்திகா, தர்சினி—ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது தற்போதைய இல்லத்தில் இன்று (20-10-2000) வெள்ளிக்கிழமை நடைபெற்று பூதவுடல் நவாலி மயானத்திற்கு பிற்பகல் 2-00 மணியளவில் தகனத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி. சிவகுரு
(கணவர்)

தற்காலிக முகவரி;
முருகமூர்த்தி கோயில் கிழக்கு வீதி,
நவாலி.

நிரந்தர முகவரி:
அல்லாரை தெற்கு,
மீசாலை.

(79680)

## கந்தையா சபாரத்தினம்

பிராமணதெரு, தும்பளையைச் சேர்ந்த க. சபாரத்தினம் அவர்கள் 2000-10-19 அன்று காலமானார்.

அன்னார் சிவபாக்கியத்தின் அன்புக்கணவரும் செல்வராணி ஸ்ரீஸ்கந்தராசா (தொழில் நுட்ப அலுவலர், அநுராதபுரம்), நாகநாதன் (ஜேர்மனி),கோகிலா ஆகியோரின் பாசமிகு தந்தையும் வரதராசா (வலயக் கல்வித் திணைக்களம், யாழ்ப்பாணம்) ஸ்ரீரஞ்சினி, விக்கினேஸ்வரி) (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும் தர்சினி, ராகுலன் (ஜேர்மனி)ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

இறுதிக்கிரியைகள் இன்று (2000-10-20)வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு அன்னரது இல்லத்தில் நடைபெற்றுபூதவுடல் தகனக்கிரியைக்காக கோரியடி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்
நா. வரதராசா
(மருமகன்)

(சி/3477)

## திருமதி பொன்னம்மா சுப்பிரமணியம்

உடுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வெள்ளவத்தை வெவசற் பிளேசை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி பொன்னம்மா சுப்பிரமணியம் 17—10—2000 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் திரு. இராமுப்பிள்ளை சுப்பிரமணியம் (றங்கூன் பென்சனியர்), அவர்களின் அன்பு மனைவியும் பரமநாதன், பத்மாதேவி, நடேசன், பத்மநாதன், கமலாதேவி, பாலநாதன் ஆகியோரது அன்புத் தாயாரும், காலஞ்சென்றவர்களான இராசையா, கண்மணிபம்மா மற்றும் நாகம்மாவினதும் அருமைச் சகோதரியும் சின்னத்தங்கம், பாலசிங்கம், பொன்மலர், இராஜேஸ்வரி, மகாலிங்கம், ஞானா ஆகியோரது அன்பு மாமியாரும் தயாபரன், வனஜா, சுகுணா, கோமதி, வசிகரன், அனுராதா, ஆரணி, ரமணன், மதுரன், சுமங்கலா, பினோஸ்—மதுரங்கன் ஆகியோரது பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் பொரளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் நாளை (21—10—2000) சனிக்கிழமை நண்பகல் ஒரு மணியளவில் நடைபெற்று பூதவுடல் கனத்தை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:-
திருமதி பத்மாதேவி பாலசிங்கம்
(மகள்)

கே. கே. எஸ். வீதி,
உடுவில் கிழக்கு,
சுன்னாகம்.

(79667)

## இராசையா ஜீவகரன்

உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் உடுப்பிட்டி A. M. C மாணவனுமாகிய இராசையா ஜீவகரன் 06-10-2000 வெள்ளிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் வல்லிபுரம் இராசையா — இராசையா இரத்தினேஸ்வரி ஆகியோரின் ஏக புதல்வனும், இ. வேணுகா, இ. றேகா ஆகியோரின் அன்புச் சகோதரனும், தங்கராசா செல்லமுத்து, தம்பிராசா பரிமளம், காலஞ்சென்ற வல்லிபுரம் தங்கம்மா, தம்பிராசா மனோன்மணி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் (07-10-2000) சனிக்கிழமை கொழும்பில் உள்ள ஜெயவர்த்தன மலர்ச்சாலையில் நடைபெற்றது.

இத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வ. இராசையா குடும்பம்

கொல்லோலை வீதி,
இமையாணன் மேற்கு,
உடுப்பிட்டி.

(79663)

உதயன்

## ஒரு வாரத்தில் மாறிய வடிவம்!

இந்துக்களுக்கு மட்டுமன்றி, பௌத்தர்களுக்கும் நல்ல நேரத்தில், சுபநேரத்தில் நம்பிக்கையுண்டு. நல்ல காரியங்களை சுபநேரத்தில் ஆற்றினால் அவை சிறப்புறும் என்று பெரிதும் நம்புபவர்கள் அவர்கள். அந்த வகையில் புதிய நாடாளுமன்றத்தின் — பதினொராவது நாடாளுமன்றத்தின் — ஆரம்ப அமர்வின் நேரம் மாற்றப்பட்டது. நேற்று முன்தினம் காலையில் கூடுவதாக நிர்ணயிக்கப்பட்டிருந்த புதிய நாடாளுமன்றம், அன்று பிற்பகலே கூடியது.

புதிய நாடாளுமன்ற உறுப்பினர்களின் எதிர்காலமும், நாடாளுமன்றத்தின் எதிர்காலமும் நல்லதாக அமைய வேண்டும் என்பதற்காகவே அந்த நேரமாற்றம் செய்யப்பட்டது எனலாம்.

மக்களின் பல உரிமைகளைப் பறிப்பதில் பெயர் பெற்ற அவசரகாலச் சட்டத்தை நீடிப்பதே புதிய நாடாளுமன்றத்தின் முதலாவது அமர்வின் ''சிறப்பு''ப் பணியாகச் செய்து முடிக்கப்பட்டது.

புதிய அரசின் எதிர்கால நடவடிக்கைகள் பலவும் மக்கள் நலன்களுக்கும் உரிமைகளுக்கும் ஊறு விளைவிப்பவையாகவே இருக்கும் என்று முதலாவது அமர்வில் கட்டியம் கூறுவது போல அரசின் இந்த நடவடிக்கையைக் கொள்ளலாம் அல்லவா?

முதற் கோணின் முற்றும் கோணும் என்பர். அதன் பிரகாரம் புதிய நாடாளுமன்றம், ஆட்சியாளர் தமக்குள்ள அதிகாரங்களை மக்களுக்கு விரோதமான செயற்பாடுகளைச் செய்வதற்குப் பயன்படுத்தும் ஒரு நிலையமாக மாறினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

மிகக் குறிப்பாகத் தமிழர்களுக்கு மேலும் இன்னல்களையும், துன்பங்களையும் விளைவிக்கும் அலுவல்களைச் செய்யும் இடமாக நாடாளுமன்றம் மாறும் என்ற அபசகுனம் ஒன்று அரங்கேறி உள்ளது!

பாதுகாப்புக் காரணம் என்ற முத்திரை குத்தப்பட்டுத் தமிழர்களின் பல அடிப்படை உரிமைகளைப் பறிப்பதற்குத் திட்டிய கருவியாக, இரும்புக் கரமாக விளங்குவது இந்த அவசரகாலச் சட்டமே. அந்தச் சட்டத்தின் தளத்தின் மீதே தமிழருக்கு எதிரான பெரும்பாலான அநீதிகளும் அடக்குமுறைகளும் கட்டவிழ்த்துவிடப் படுகின்றன.

அத்தகைய சட்டத்தை முந்திய அரசாங்கம் கடந்த ஆறு வருடங்களாக மாதம், நாள் தப்பாது நீடித்துவந்தது. அது தெரிந்த விடயமே. அதனைப் புதிய நாடாளுமன்றத்தின் முதலாவது அமர்வில் கொண்டு வந்து நிறைவேற்ற வேண்டும் என்ற அவசரம் எதற்காக?

அவசரகாலச் சட்டம் தமிழர்களையே மிகப் பெரிய அளவில் பாதித்தாலும் சிங்கள மக்கள் மீதும் அராஜகத்தைக் கட்டவிழ்த்து விடுவதற்கு அரசுக்கு அது ஒரு பலமான ஆயுதமாக உதவும் என்பதனை மறந்துவிட முடியாது. மக்கள் விரோதச் செயல்களைச் சட்டவிதியாக்கிய வடிவமே அவசரகாலப் பிரகடனம்.

மக்கள் நலன்களுக்காக உழைக்கப்போவதாகக் கூறி வாக்காளர்களின் காலடிகளில் விழுந்து வாக்குக் கேட்டே அரசியல்வாதிகள், அதிகாரம் கிடைத்த ஒரு வார காலத்தில், மக்கள் நலன்களைப் பாதிக்கும் சட்டத்தின் நீடிப்புக்குக் கையை உயர்த்தியுள்ளனர்! மக்கள் நலனுக்கு அவர்கள் கொடுக்கும் அர்த்தம் இதுதானா?

# சைவசித்தாந்தம் ஒப்பற்ற வாழ்க்கை நெறி:
# தெய்வநெறி காட்டி உய்யும் வழி செய்வது

சைவ சித்தாந்தம் ஓர் ஒப்பற்ற உயர்ந்த வாழ்க்கை நெறி. வாழ்க்கையின் உண்மையான பயனை அடைய வைக்கும் நெறியும் அதுவே. வையத்துள் வாழ்வாங்கு வாழும் வாழ்வையும் அதனால் உயிரடையும் உறுதியையும் எடுத்துக் காட்டுவது சைவசித்தாந்தம்.

ஒரு நாட்டின் நிலை தாழ்ந்த போதெல்லாம் சமயம் தான் மக்களுடைய மனதை —பண்பை—மனிதப் பண்பை வளர்த்து வந்துள்ளது. ஒழுக்கம் போதும் — சமயவாழ்வு தேவையில்லை யென நவீன விஞ்ஞானிகள் கூறுவாம். ஆனால் அந்த வாழ்வு படமில்லாத சட்டம் போன்றது. எந்தப்பயனையும் எய்தவைக்காது. உண்மையான சைவ வாழ்வு வாழுகின்றவர்களை இன்று விரல் விட்டு எண்ண வேண்டியுள்ளது. அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை என்பது வள்ளுவன் கூற்று. அவ்வுலகம் செல்கின்ற வாழ்க்கையை இவ்வுலகிலேயே நாம் பெற்றுவிட வேண்டும். அதற்கு வழிகாட்டும் உயர்ந்த நெறி சைவ சித்தாந்தம் படிப்படியாக மனமாசு அகன்று தூய்மைபெறும் வழியை இது காட்டுகின்றது.

### மனிதப் பிறவி

மானிடப் பிறவி அரிதானது. இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ என்பது தாயுமானவரின் அருள் வாக்கு. மக்கட்பிறப்பு ஏனைய பிறப்புகளிலும் உயர்வானது. தாமெடுத்த மனிதப் பிறவியை ஏனைய பிறவிகளிடமிருந்து வேறு படுத்துகின்றார் மணிவாசகர். ''புல்லாகிப் பூடாய்'' என்று பாடி தனது உய்வு நிலையை மேலும் காட்டுகிறார்.

''மெய்யே உன் பொன்னடிகள் கண்டு இன்று வீடுற்றேன்'' பெருமிதமாகப் பேசும் இடம் இது. மானிடப் பிறப்பை எடுப்பவர்களும் வேதாகம விளக்கம் வாய்ந்த புண்ணிய பூமியில் பிறக்கும் பேற்றை அடைவது மேலும் சிறப்பாகும் ''மானிடப்பிறவி தானும் வகுத்து'' என்ற சிவஞானசித்தியாரில் இடம்பெற்ற பாடல் மூலம் அருணந்தி சிவாச்சாரியார் மேற்காட்டிய பெருமையை விளக்குகிறார்,

வேதமென்பது வைதிக சமயத்தின் பொது நூலாகக் கொள்ளப்படுகிறது. ஆகமம் சைவ சமயத்தின் சிறப்பு நூலாக விளங்குகிறது. அனைவருக்கும் உரியது வேதம் சத்திநிபாதத்திற்கு உரியது ஆகமம். சிவசக்தி ஆன்மாவில் பதிந்தவர்களையே சத்திநிபாதம் என



அழைப்பர் ஞானசம்பந்தரின் அவதாரத்தைக் குறிப்பிட்ட சேக்கிழார் சுவாமிகள் ''வேத நெறிதழைத்தோங்க மிகுசைவத்துறைவிளங்க'' என்பர்.

வைதிக சமயத்தில் இடம் பெறும சைவ நெறி மிகவும் மேலானது. இதனாலேயே மிகு சைவத்துறை என்று குறிப்பிடுவது எமது கவனத்திற்குரியது. வேதம் என்பது ஒரு மரமாக வைத்துக்கொண்டால் இலை, தளிர், அரும்பு, பூ, பிஞ்சு, காய் அனைத்தையும் தாங்கி நிற்பது அந்த மரம். குமரகுருபரர் இது பற்றிச் சிறப்பாகக் கூறுகிறார். ஆனால் சிவாகமமென்பது அம்மரத்தின் கனிந்த கனியாக வர்ணிக்கப்பட்டுள்ளது. அந்தக் கனியில் இடம் பெறும் கோதும், விதையும் அகச் சமயங்களாகவும் கனியைப் பிழிந்து எடுத்த சாறு சைவ சித்தாந்தமாகவும் குமரகுருபரர் எடுத்துக் காட்டுகிறார். சாரம் கொண்ட சைவ சித்தாந்தத் தேனமுது அருந்தினர் சிலரே என்பது அவர் பாடல்.

உயிர்கள் உய்வடையும் பொருட்டு சுத்த மாயை என்கின்ற வயலில் அருள் என்கின்ற விதையை விதைத்து இரக்கமாகிய நீரைப்பாய்ச்சி வேத மென்னும் மரத்தினை இறைவன் வளர்த்தான். அம்மரத்தினால் உண்டான பயன்கள் பலவாகும் அதில் சிலர் இலைகளை சிலர் தளிர்களை மற்றும் சிலர் தமது தகுதிக்கு ஏற்ப அரும்பு, மலர், காய் என்பவற்றைப் பறித்து மகிழ்ந்தனர். இந்த நிலையில் வேதமாகிய மரத்தின் வேதாந்தமெனும் உச்சியில் பழுத்த அருங்கனியைப் பிழிந்து சாரமான சைவசித்தாந்தமெனும் தேனமுதை உண்ணும் பேற்றினைப் பெற்றவர் சிலரே என்கிறார் குமரகுருபரர்.

இதன் அடிப்படைக் கொள்கை ஒன்றே யாதும். ஆதியும் அந்தமுமில்லாத முழுமுதற் பொருளான பதியும் தன்னை இயல்பாகப் பிணைத்துள்ள பாசத்தில் இருந்து நீங்கித் திருவருளைத் துணையாகக் கொள்ளும். பசுவும் வினை காரணமாக உயிரைப் பிடித்து நிற்கும் பாசமும் முப்பொருள்கள் என்பது காட்டப்படுகின்றது. உயிரைப் பற்றி நிற்கும் பாசத்தில் இருந்து விடுபடுவதற்கு திருவருளைத் துணையாகக் கொள்வதும் முத்தி நிலையில் திருவடியே தஞ்சமாகப் பேரின்ப வாழ்வு இருத்தலும் சைவ சித்தாந்தத்தின் முடிந்த முடிவாகும்; இதுவே வீடு பேறு என்பது. இதனைப் பின்பற்றி வாழ்பவர்கள் சித்தாந்த சைவர்கள் என்று பேசப்படுவர்

இயல்பான அறிவுடைப் பொருளே பதியென்றும் அறிவிக்க அறியவை பசுவென்றும் அறிவித்தும் அறிய முடியாதவை பாசமென்றும்படும். இந்தப் பாசத்திலின்றும் நீங்கி ஆன்மாவானது பதியை அடைவதே அந்தப் பெருநிலையாகும்.

இறைவன் மானிடப்பிறவியை எனக்குத் தந்தது அவனை அடைந்து முத்தி பெறுவதற்காகவே இந்த நோக்கம் நிறைவேறும் வகையில் வாழ்வதே சைவசித்தாந்த மார்க்கமாகும். கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிற்றல் இம் மார்க்கத்தில் கடைப்பிடிக்கப்படுகின்றன. இதுவே வழிகாட்டு நெறிக்கு எம்மை ஆளாக்குகிறது. தோத்திர சாத்திரங்கள் இதனை நன்கு எடுத்துக் காட்டுகின்றன.

இது எக்காலத்தும் மாறுபடாத இயல்பை உடையன.

### முப்பொருள் விளக்கம்

எண் குணங்களோடு கூடியவன் பதியெனப் பேசப்படுகிறான் மாயா குணங்களில் இருந்து வேறுபட்டு அருட் குணங்கள் என்று பிரித்து நோக்கக்கூடிய இக் குணங்களையுடைய இறைவனே உலகத்தின் முழுமுதல் நாயகனாக உயர் தலைவனாக பேசப்படுகிறான் ''எங்கும் எவையும் எரியுறு நீர்போல்'' திருவருட்பயன் பாடல் பதிமுது நிலையில் இது காட்டப்படுகிறது. பதியானது உருவம் அருவுருவம் என்ற நிலையில் ஆன்மாக்களின் வழிபாடாக ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

சிவம், சக்தி, நாதம், விந்து ஆகியவை அருவ வழிபாடு எனப்படும். அருவுருவ வழிபாடு சிவலிங்க வழிபாடாகும். கண்ணால் கண்டமாத்திரம் வழிபடுவது. அருவவழிபாடு நினைத்து வழிபடுவது. உருவ வழிபாடு காண்பதோடு உருவங்களைப் பதுத்து நோக்குவதற்கு உரிய வழிபாடு. இவற்றை மகேஸ்வர மூர்த்தம் என்பர்.

மற்றொரு பொருளாக பசுவாகிய ஆன்மா காட்டப்படுகிறது. செம்பிற் களிம்பாக ஒட்டிநிற்கும் ஆணவத்தைநீக்க தனு, கரண, புவன, போகமாகிய மாயை உயிர்களோடு ஒட்டிக்கொள்ளும் இறைவன் அவற்றிற்கு உடம்பைக் கொடுக்கிறான் உடம்பைப் பெற்ற ஆன்மாக்கள் இன்ப துன்பங்களை அனுபவித்து நல்வினை தீவினை மூலம் முடிவில் சிவப் பேற்றுக்குரிய மார்க்கத்தை எய்துகின்றது. இந்த ஆன்மாவானது பெத்த நிலையில் மும்மலங்களினைப் பற்றிக் கொண்டும் முத்தி நிலையில் அவற்றினின்று விடுபட்டும் காட்சி தருகிறது.

உலகத்தைச் சார்ந்திருப்பதனாலும் முடிவிலே கடவுளைச் சார்ந்திருப்பதாலும் சத - சத்து என்று ஆன்மாவைக் குறிப்பிடுவர். சத்தாகிய பதியையும் அசத்தாகிய உலகத்தையும் சார்ந்திருக்கும் இயல்பு ஆன்மாவுக்கு உண்டு என்பதே இதன் பொருள்.

அடுத்து பாசம். அதுவும் பசுவைப்போல் அநாதியானது முத்தி நிலையிலும் ஆன்மாவை விட்டு விலகி நிற்குமேயன்றி முற்றாக விட்டுப் போகாது. முற்றிலும் ஆன்மாவோடு நிற்கும். ஆனால் விலகி நிற்கும் விலகி தனது ஆணவத்திற்குரிய செயலைச் செய்யாது.

## சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி
## தங்கம்மா அப்பாக்குட்டி

ஆணவத்தை மூலமலமென்றும் குறிப்பிடுவர். இதனை அடக்க வேண்டுமெனில் இறைவனைப் பற்றுக்கோடாகக் கொள்ள வேண்டும். உலகப்பற்றை நீக்க தெய்வப் பற்று இறுகி நிற்கும். திருவருள் துணை நிற்கும்போது உயிர் படிப்படியாக அறிவைப் பெறுகிறது. உயிர்களை மறைத்து நிற்கும் அந்தப் பொருளே ஆணவம் எனப்படும். இது சடப்பொருள் அறிவற்றது, இருள் போன்றது ஆணவம் தன்னையும் காட்டாது மற்றவற்றையும் காட்டாது.

ஒருவனின் அறிவை மறைக்கின்ற இச்சடப் பொருள் அநாதியாகவே ஆன்மாவுடன் ஒன்றிநிற்கிறது. ஆணவ மறைப்பை நீக்க வேண்டும் என்பதற்காகவே ஆன்மாக்களுக்குப் பிறவிகள் கொடுக்கப்படுகிறது. ஆன்மா திருவருள் வயப்பட்டு நிற்கும் பொழுது ஆணவம் வலிகெட்டு ஆன்மாவோடு இணைந்து நிற்கிறது கூர்ந்து கவனிக்கற்பாலது.

### நான்கு பாதங்கள்

மனம் ஒரு குரங்கு உலகப் பற்றுக் கோடுகளில் இருந்து நீக்குவதற்கு குரங்கின் நிலையிலே ஆன்மா விளங்குகிறது. அதற்குரிய உபாயம் தேடுதல் வேண்டும். ஆன்மா அந்த உபாயத்தின் மூலம் முத்தி நிலை அடைய வேண்டும். அந்த உபாயங்களே சரியை, கிரியை, யோகம், ஞானம் எனப்படும் நாற்பாதங்களாகும். இவற்றைச் சிவாகமங்கள் தெளிவாக விளக்குகின்றன.

சரியை என்பது இறைவனை நோக்கிச் செய்யும் பணியாகும். எண்பத்தியொரு ஆண்டுகள் சரியைத் தொண்டு செய்த அப்பர் சுவாமிகளின் வாழ்வு எடுத்துக் காட்டாகும். இவரது வாழ்வு தாசமார்க்கம் பற்றியதாகும். தாசன் என்பது அடிமை நிலை குறித்து நிற்பது இவர்களையும் முத்தி சாலோகம் என்பது. இறை உலகத்துள் வாழ்வுப் பேற்றைப் பெறுவதே சாலோகமுத்தி

கிரியை வழிபாடு அகம் புறம் என்னும் இரண்டும் சேர்ந்தது இதற்கு எடுத்துக் காட்டு திருஞானசம்பந்தர். ஒருவடிவத்தில் வைத்து இறைவனைப் பூசிப்பது, அபிஷேகம் முதலியவற்றைச் செய்வது, அக்கினி வளர்த்து யாக வேள்வியாற்றுவது சற்புத்திர மார்க்கம் என இதனைச் சொல்வர் இதில் நிற்பது சாமீப முத்தி. இறைவனுக்குப் பக்கத்தில்.

இறைவனை அகவழிபாட்டில் கண்டு பூசிப்பது யோக

(9 ஆம் பக்கம் பார்க்க)

## பாசத்தினின்றும் நீங்கிப் பதியை அடைவதே ஆன்மாவுக்குப் பெருநிலை

யாழ். பல்கலைக்கழக, கைலாசபதி கலையரங்கில் இம்மாதம் 13 ஆம் திகதி சிமாட்டி லீலாவதி இராமநாதன் நினைவுப் பேருரையை சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி நிகழ்த்தினார். ''சைவ சித்தாந்தம் காட்டும் வாழ்க்கை நெறி'' என்னும் பொருளில் இடம் பெற்ற அந்தச் சொற்பொழிவின் தொகுப்பு இது.

தொகுத்தவர்:
நெடுந்தீவு
**லக்ஸ்மன்**

## நாளை

ஐப்பசி 5
சனிக்கிழமை
திதி: நவமி
முன்னிரவு 11.10 வரை.
நட்சத்திரம்: பூசம்
பிற்பகல்: 1. 27 வரை
சுபநேரம்: 3.02 — 4.32
ராகுகாலம்: 9.02—10.32
(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## ஞானக்கதிர்

### உதய வாக்கு

ஒருவன் சோம்பலுடன் பலவீனமாக நூறு ஆண்டுகள் வாழ்வதைக் காட்டிலும், வீரியத்தோடு ஒருவன் முயற்சி செய்து ஒருநாள் வாழ்வதே மேலான வாழ்க்கையாகும்.

- புத்தர்.

# சின்னஞ்சிறு விளம்பரம்

## படிவம்

தொழில்நுட்பக் கல்லூரிகளின் அனுமதிக்கான விண்ணப்பம் 2001 ஆம ஆண்டு விற்பனையாகின்றது. படிவம் அளவு **13"x 8"** விலை ரூபா 2.50. மொத்த வியாபாரிகளுக்கு கழிவு உண்டு. பாரதி ,430, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 021-3081

(**C**/13321)

## மணமகன் தேவை

யாழ். இந்து குடும்பத்தைச் சேர்ந்த 42 வயது பூரட்டாதி, **Accounts Clerk** பெண்ணுக்கும், 41 வயது **Staff Nurse** பெண்ணுக்கும் தகுந்த வரன்களை எதிர்பார்க்கின்றோம். மணமாகாத, விவாகரத்துப் பெற்ற, தாரமிழந்தவர்களும் விண்ணப்பிக்கலாம். முழுவிவரங்களுடன் கடிதம் மூலம் தொடர்பு கொள்ளவும். பொருத்தமற்றவை திருப்பி அனுப்பி வைக்கப்படும். விளம்பர இல.1112, மே/பா உதயன். (79275)

## இலகு திருமண சேவை

1964 சித்திரை **T.O**, 1965 அத்தம் **Engineer**, 1966 மிருகசீரிடம் **Bank**, 1972 ஆயிலியம் **(B.Com. CIMA) Co.op Inspector**, 1972 சதயம் ஆசிரியர், 1967 ரேவதி **Enginner Singapore**, 1963 சுவாதி **U.K.**, முதலியோருக்கு மணப்பெண்கள் தேவை. துரை விமலா. **K.K.S.** வீதி, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம். (79642)

## தவறிவிட்டது

செல்வி பிரிந்தாமலர் சங்கரலிங்கம் என்பவருடைய தே.அ.அ.(இல. 805091622**v**), வி.அ.அ., உ.தொழி. நுட்.கல்.அ.அ. என்பன நல்லூருக்கும் உயர் தொழில்நுட்பக் கல்லூரிக்கும் இடையில் முத்துமாரி அம்மன் கோயிலில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் **P.** ஆறுமுகசாமி (**T.O** மாநகரசபை), 34, செட்டித்தெரு நல்லூர் எனும் முகவரியில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும். (79628)

## அபூர்வ ஜோதிடம்

உங்கள முயற்சிகள், அதிர்ஷ்டம் பெற, தீராத நோய் அற்புதகுணம், கிரகதோஷத்திலிருந்து விடுபடல். தொடர்பு: ஆடியபாத வீதி, சரஸ்வதி மில லேன், கொக்குவில் கிழக்கு. நேரம்: சனி, ஞாயிறு 8.30-5.00 மணி. (79626)

## விற்பனைக்கு

**Hero Honda CD** 100 **SS** மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. தொடர்பு: 67, செட்டித்தெரு, நல்லூர். (79627)

6 **Kw** மின்சார இயந்திரம் (லிஸ்ரர்) மற்றும் ஐஸ்கிறீம் தயாரிக்கும் கொம்பிரஷர் பாத்துடன் **Eurostar** 12 அடி (அமெரிக்கன்) அன்ரனா உடன விற்பனைக்குண்டு. ப.விக்கினராசா(ராசா) **No.23**, கேசாவில் பிள்ளையார் கோயில் றோட், (நாச்சிமார் கோயிலடி) வண்ணார்பண்ணை. (79650)

## 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரா ஞா. யோசவ் (அன்ரன்)

தோற்றம் 20-12-1945 — மறைவு 20-10-1994

திதி 20-10-2000

**ஆண்டுகள் தான் ஆறு ஆனாலும்**
**நீங்காத நினைவாக எங்கள் மனதில் குடி கொண்டுள்ளீர்!**
**உங்கள் அன்பு முகம் எம் மனதை விட்டகலாது!**

இவரின் ஆத்ம சாந்திக்காக எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

இவரின் பிரிவால் துயருறும்

அன்பு மனைவி - **யோ.இமெல்டா எட்விணம்மா.**
பிள்ளைகள் - **எடிசன், எல்சி, எட்மன், எலாறஸ், ஜெனிற்றா.**
மருமக்கள் - **மோகன்றாஜ் அஜந்தா.**
பேரப்பிள்ளைகள் - **டலின் கிறிஸ்ரீனா, டெனிஸ், டில்ஷியா, விஜூஷியா.**
**சகோதரிகள் மற்றும் உற்றார், உறவினர்கள்.**

*55, வைமன் வீதி,*
*நல்லூர், யாழ்ப்பாணம்.*

(79649)

## ஓராண்டு நினைவலைகள்



மலர்வு 03-07-1928 — உதிர்வு 31-10-1999

அமரர் சின்னத்தம்பி சுப்பையா

திதி: 20-10-2000

**அன்பின் இருப்பிடமாய் பண்பின் உறைவிடமாய்**
**பாசத்தின் பிறப்பிடமாய் குடும்பத்தின் தலைவனாய்**
**இருந்தும் எம் உயர்வுக்காய் உழைத்து**
**நல்வாழ்வு வாழ வழிகாட்டிய எம் அன்புத் தெய்வமே!**
**நீங்கள் ஓடி மறைந்து ஓராண்டு சென்றாலும்**
**எங்கள் மனதில் வீற்றிருப்பீர் பல்லாண்டு!**

***ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!***

உங்கள் பாசத்துடன் நினைவு கூரும்
**மனைவி, பிள்ளைகள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

நிரந்தர முகவரி:
*கைதடி மேற்கு.*
*கைதடி.*

தற்காலிக முகவரி:
*கல்லாரை,*
*மல்லாகம்.*

(79620)

## SPOKEN ENGLISH

சுலபமான முறையில் ஆங்கிலம் பயில, தபால் மூலமும். ஆசிரியர்: ந.விக்னேஸ்வரன் ஆச்சாரி, 426 (302), காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். நாகலிங்கம் சுவாமிகள வீதி, சங்கானை. (79579)

## மாதாந்த உதவிப்பணம்

நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் பொதுசன மாதாந்த உதவிப்பணம பெறுபவர்களுக்கான செப்ரெம்பர், ஒக்ரோபர் மாதங்களுக்கான கொடுப்பனவுகள சம்பந்தப்பட்ட தபாலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

உரியவர்கள் தபாலகங்களுடன் தொடர்புகொண்டு தமக்குரிய கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொள்ளலாம் என்று-நல்லூர் பிரதேச செயலா கலாநிதி க.குணராஜா தெரிவித்தார்.(ஐ-7)

## சங்கத்தின் கதிரைகள் மீட்பு

சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் இருந்து காணாமற் போனதாகக் கருதப்பட்ட வாடகைக் கதிரைகள் சங்க அறையொன்றிலிருந்து மீட்கப்பட்டுள்ளன. கடந்த திங்களன்று அங்கு சென்றவர்கள் இவற்றை மீட்டு வந்தனர்.

சேதமடையாமல காணப்பட்ட 130 கதிரைகள் கொண்டு வரப்பட்டுள்ளதாகவும், ஷெல சிதறல்களால் சிறிய சேதங்களுக்கு உள்ளான 50 கதிரைகள் அங்கு பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-117)

## இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு சவர்க்காரம்

லயன்ஸ் உலகசேவை தினத்தையிட்டு சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் மானிப்பாய் கட்டுடையில் உள்ள இடம்பெயர்ந்தோர் முகாம்களில் தங்கியுள்ள 150 குடும்பங்களுக்கு தொற்றுநீக்கி சவர்க்காரங்களை வழங்கினர்.

அத்துடன் இப்பகுதியில் உள்ள மகேஸ்வரி இல்லத்தில் உள்ள பிள்ளைகளுக்கும் சவர்க்கார வகைகள் வழங்கப்பட்டதாக கழகத் தலைவர் லயன் கா. சற்குணதேவன் தெரிவித்தார். (ஐ-117)

## வாக்குச்சீட்டுகளில் வாசகங்கள்

தென்மராட்சி,ஒக்.20

கடந்த வாரம நடைபெற்ற நாடாளுமன்ற பொதுத் தேர்தலின் போது வாக்காளர்களுக்கு வழங்கப்பட்ட வாக்குச்சீட்டுக்கள் சிலவற்றில் வாசகங்கள் எழுதப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

"தமிழீழத் தாயகம்" "எனது வாக்கு புலிகளுக்கே" என்பன போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட வாக்குசசீட்டுக்கள் சில யாழ்ப்பாணத் தொகுதியில் உள்ள வாக்குப் பெட்டிகளில் காணப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

வாசகங்கள் எழுதப்பட்ட வாக்குச்சீட்டுக்கள் நிராகரிக்கப்பட்ட வாக்குகளுடன் சேர்க்கப்பட்டன. (ஐ-117)

## அஞ்சலகம் இடம் மாற்றம்

கரவெட்டி அஞ்சல் அலுவலகத்தில் இயங்கிவந்த மீசாலை உப அஞ்சல் அலுவலகம் கடந்த திங்கட்கிழமை முதல் படுத்தித்துறை கிராமக்கோட்டடி சந்தியிலிருந்து வல்லிபுரக் கோயிலுக்குச் செல்லும் வீதியில் உள்ள தனியார் கட்டடமொன்றுக்கு மாற்றப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-117)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



மலர்வு 15-02-1933 — உதிர்வு 20-09-2000

### அமரர் சின்னத்தம்பி சாம்பசிவம்

(இளைப்பாறிய லிகிதர், யாழ்.தேர்தல பிரிவு)

20-09-2000 அன்று இறைபதம் எய்திய எமது குடும்பத்தலைவரின் இறுதிக் கிரியைகளில் பங்குபற்றியவர்களுக்கும் பத்திரிகை வாயிலாகவும் துண்டுப்பிரசுரவாயிலாகவும், மலர்வளையம்மூலம் அஞ்சலி செலுத்தியவர்களுக்கும், உற்றார், உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் எமது இதயபூர்வமான நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்வதுடன 23.10.2000 திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறவிருக்கின்ற ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**- குடும்பத்தினர்**

*சுதுமலை தெற்கு.*
*சுதுமலை.*

(79608)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அன்னை மடியில் 26-01-1932 — ஆண்டவன் அடியில் 20-09-2000

### திருமதி ஆறுமுகம் மீனாட்சி

(கரவெட்டி மேற்கு, கரவெட்டி)

**மானிடத்தின் முடிவு மரணமென்று**
**சோதிடம் சொல்லத் தேவையில்லை - ஆயினும்**
**வானிடம் நீ தேடிப் போனதனால்**
**மானிட மனங்களிங்கு தவிக்குதம்மா!**

எமது குடும்பத்தின் குல விளக்கு அணைந்த போது நேரிலும் தபால், தந்தி, தொலைபேசி ஆகியவற்றின் மூலமும் துயர் பகிர்ந்த அன்புள்ளங்களுக்கும் கண்ணீர் அஞ்சலிகள், பிரசுரங்கள் வெளியிட்டவர்களுக்கும் மரணவீட்டு சடங்குகள் முதல் அந்தியேட்டிக் கிரியைகள் வரை உறுதுணையாய் நிற்கும் எமது உற்றார், உறவினர், நண்பர்கள், அன்பர்கள் அனைவருக்கும் எமது இதயபூர்வமான நன்றியைத் தெரிவிப்பதுடன் இன்று (20-10-2000) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நிகழும் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகளிலும் மதிய போசனத்திலும் பங்குபற்றிச் சிறப்பிக்கும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கணவன்: **வே. ஆறுமுகம்**
பிள்ளைகள்: Dr. **ஆ. கேதீஸ்வரன்**
**ஆ.சுப்பிரமணியம்**
**மருமக்கள் ,பெறாமக்கள், பேரப்பிள்ளைகள்.**

*கரவெட்டி மேற்கு.*
*கரவெட்டி.*

(79580)

## மணிவிழாக் காணும் எங்கள் அண்ணனை வாழ்த்துகின்றோம்

20-10-2000



வட்டுக்கோட்டைத் தொகுதி, தமிழ்ச்சங்கத் தலைவரும் சிறந்த கல்வி மானும்,
சொற்பொழிவாளரும், சமூக சேவையாளரும்
தமிழ்ப் பற்றாளருமாகிய *எங்கள் அண்ணன*

**சொல்வேந்தன்**
**பண்டிதர் ப.இராசகுரு** அவர்கள்
(பிரசித்த நொத்தாரிசு)

மணிவிழாக் காணும் இந்நாளில் வளமெலாம் பெற்று பல்லாண்டு வாழ எல்லாம் வல்ல ஈசுவரத்தனை வேண்டுகிறோம்.

*பண்ணாகம்,*
*சுழிபுரம்.*

**-பண்ணாகம் இளைஞர்கள்.**

(79643)

## சிட்னியில் 'பாரா' ஒலிம்பிக் ஆரம்பம்

சிட்னி, ஒக். 20

ஆஸ்திரேலியாவின் சிட்னி நகரில் உள்ள ஒலிம்பிக்திடலில் உடல் ஊனமுற்ற விளையாட்டு வீரர்களுக்கான 11 ஆவது 'பாரா' ஒலிம்பிக் போட்டிகள் கோலாகலமான விழாவுடன் நேற்றுத் தொடங்கியது.

சுமார் 4 ஆயிரம் உடல் ஊனமுற்ற விளையாட்டு வீரர்கள் போட்டிகளில் பங்கு பற்றுகின்றனர்.

## வீரப்பனைக் கைது செய்யாதது ஏன்?

# தமிழக, கர்நாடக அரசுகளிடம் இந்திய உச்ச நீதிமன்றம் கேள்வி!

புதுடில்லி, ஒக். 20

பல கொலைகள், ஆள் கடத்தல்கள் போன்றவற்றை செய்துள்ள வீரப்பனை இது வரை கைது செய்யாததற்கான விளக்கங்களை தமிழக கர்நாடக அரசுகளிடம் இந்திய உச்ச நீதிமன்றம் கோரியுள்ளது.

நடிகர் ராஜ்குமாரை விடுவிக்க சிறைகளில் உள்ள தனது கூட்டாளிகளை விடுதலை செய்ய வேண்டும் என்ற வீரப்பனின் நிபந்தனையை நிறைவேற்ற இரு மாநில அரசுகளுக்கும் தடை விதிக்கக் கோரி வீரப்பனால் கொல்லப்பட்ட பொலிஸ் அதிகாரி ஒருவரின் தந்தை தாக்கல் செய்த மனு மீதான விசாரணையில் உச்ச நீதிமன்றம் மேற்படி விளக்கத்தைக் கோரியுள்ளது.

இந்த விசாரணையின் போது பிரிவினைவாத சக்திகளுடனான வீரப்பனின் தொடர்பு குறித்துக் கவலை தெரிவித்த உச்சநீதிமன்ற நீதிபதிகள்,

வீரப்பன் தனது நிபந்தனைகளை நிறைவேற்றிக் கொண்டு ராஜ்குமாரை விடுதலை செய்தாலும் பின்னர் வேறு யாரையாவது கடத்தக்கூடும் என்றும் —

அவனைக் கைது செய்யாவிட்டால்இத்தகைய கடத்தல்கள் தொடர்ந்து கொண்டே இருக்கும் என்றும் — கூறியுள்ளனர்.

கர்நாடக அரசு சார்பில் ஆஜரான சட்டத்தரணி சால்லா வாதிடுகையில்,

வீரப்பனுக்கு உதவியதாகக் கைது செய்யப்பட்டவர்களில் 70 வயதைத் தாண்டியவர்களும், பெண்களும் உள்ளதாகவும் —

கடந்த ஆண்டு டிசம்பரில் இந்தியன் ஏயர்லைன்ஸ் விமானம் ஆப்கானிஸ்தானுக்குக் கடத்தப்பட்ட சம்பவத்தில் கடத்தல் காரர்களின் நிபந்தனைப்படி 3 தீவிரவாதிகளை மத்திய அரசு விடுவித்ததாகவும், அதுபோன்ற நிலைமைகளில் சட்டவிரோதக் கோரிக்கைகளை நிறைவேற்றுவதைத் தவிர அரசுகளுக்கு வேறு வழியில்லை என்றும் தெரிவித்தார்.

இந்தக் கருத்துகளை ஒப்புக் கொள்ள மறுத்த நீதிபதிகள்

உதய அரங்கில்

விமானக் கடத்தல் வெளிநாட்டில் நடைபெற்றதாகவும், வீரப்பன் விவகாரம் உள்நாட்டில் நடப்பதாகவும், இவற்றை ஒரே மாதிரியாக அணுகக் கூடாது என்றும் சுட்டிக்காட்டினார்கள். (ஒ-8)

## எலிசபெத் மகாராணி வத்திக்கானுக்கு விஜயம்

லண்டன், ஒக். 20

இங்கிலாந்துத் திருச்சபையின் கௌரவத்தலைவரான எலிசபெத் மகாராணி கடந்த இருபது வருடங்களில் முதல் தடவையாக வத்திக்கானுக்குச் சென்று பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பரைச் தரிசித்தார். ராணியுடன் அவரது கணவர் மன்னர் பிலிப்பும் உடன் சென்றுள்ளார்.

பாப்பரசர் திருநிலைப்படுத்தப்பட்ட 22 ஆவது வருட நிறைவு தினத்தையொட்டி கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற விசேட நிகழ்ச்சிகளிலும் மகாராணி கலந்து கொண்டதாகக் கூறுப்படுகிறது.

இதற்கு முன்னர், 1980 ஆம் ஆண்டு மகாராணி வத்திக்கானுக்கும் 1988ஆம் ஆண்டு பாப்பரசர் லண்டனுக்கும் விஜயம் செய்திருந்தனர்.

வட அயர்லாந்துப் பிரச்சினையில் கத்தோலிக்கர்களுக்கும் புரட்டஸ்தாந்துகளுக்கும் இடையேயான வேறுபாடுகள் முக்கிய இடம் வகிக்கும் நிலையில் புரட்டஸ்தாந்தவரான மகாராணி, கத்தோலிக்கரின் மதத்தலைவரான பாப்பரசரைத் தரிசித்திருப்பது குறிப்பிடத்தக்கது. [ஒ-8]

## செய்தித் துளிகள்

### நைஜீரியாவில் கட்சி மோதலில் 100 பேர் பலி

லாபாஸ், ஒக். 20

நைஜீரியாவில் பிரதான அரசியல் கட்சிகளின் ஆதரவாளர்களுக்கும் ஒ. பி.சி. வலதுசாரி அமைப்பினருக்கும் இடையே ஏற்பட்டுள்ள மோதல்களில் நூறுக்கும் அதிகமானோர் கொல்லப்பட்டுள்ளனர்.

### பிரிட்டனில் ரயில்வே நிர்வாகி பதவிவிலகல்

லண்டன், ஒக். 20

பிரிட்டனில் 4 பேர் இறந்து 38 பேர் படுகாயமடைந்த ரயில் விபத்துக்குப் பொறுப் பேற்று பதவி விலக உள்ளதாக பிரிட்டிஷ் ரயில்வேயின் பிரதம பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

### அமெரிக்காவில் முன்னிலையில் அல்கோர்

வாஷிங்ரன், ஒக். 20

அமெரிக்க அதிபர் தேர்தலையொட்டி வேட்பாளர்களுக்கிடையே நடத்தப்பட்ட தொலைக் காட்சி நேரடி விவாதத்தின் கடைசிச் சுற்றின் முடிவில் புஷ்ஷை விட அல்கோர் வெற்றி பெறும் வாய்ப்பு அதிகரித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

### இந்தியாவில் மூலிகை ஏற்றுமதி

புதுடில்லி, ஒக். 20

சித்த ஆயுர்வேத மூலிகைகள் ஏற்றுமதியால் இந்தியாவிற்கு ஆண்டுதோறும் 300 கோடி ரூபா அந்நிய செலாவணி கிடைப்பதாக மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

### இத்தாலியில் பெரும் வெள்ளம்

ரோம், ஒக். 20

இத்தாலியில் தொடர்ந்து பெய்து வரும் அடைமழையால் கடந்த 50 ஆண்டுகளில் இல்லாதவாறு ஏற்பட்டுள்ள பெரும் வெள்ளத்துக்கு 19 பேர் பலியாகியுள்ளனர், 38 ஆயிரம் பேர் பாதிப்படைந்துள்ளனர்.

### காஷ்மீரில் குண்டு வெடிப்பு

ஸ்ரீநகர், ஒக். 20

இந்தியாவின் காஷ்மீர் மாநிலத்தில் இடம்பெற்ற பாரிய குண்டுவெடிப்பில் 6 பேர் கொல்லப்பட்டதுடன் 8 பேர் காயமடைந்தனர். ஸ்ரீநகர் அருகே இந்தக் குண்டுவெடிப்பு நிகழ்ந்துள்ளது.

### கனடாவில் வரி குறைப்பு

மொன்றியல், ஒக். 20

கனடாவில் வரிச்சுமையைக் குறைக்க உள்ளதாக ஆளும் லிபரல் கட்சி அரசு தெரிவித்துள்ளது. வருமானத்தின் 4.7 சதவீதமாக உள்ள வரியை 3.5 சதவீதமாகக் குறைக்க அரசு முடிவு செய்துள்ளது

தேர்தலையொட்டியே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக எதிர்க்கட்சிகள் கூறியுள்ளன.

## ஜெய்பூரில் 117 ஜோடிகளுக்கு கூட்டுத் திருமணம்

ஜெய்பூர் ஒக். 20

இந்தியாவின் ராஜஸ்தான் மாநிலம் ஜெய்பூரில் 117 ஜோடிகளுக்கு ஒரே சமயத்தில் கூட்டாகத் திருமணங்கள் நடைபெற்றன.

ராஜஸ்தானிய சம்பிரதாயப்படி திருமணத்துக்குப் பெரும் பணச் செலவு ஆவதால் எளிமையான இது போன்ற கூட்டுத் திருமணங்களுக்கு அதிக ஆதரவுகிடைத்துள்ளதாகக் கூறப்படுகிறது. (ஒ-8)

## கடுமையான வாக்குவாதத்தால்

# காஸா மோதல் குறித்த ஐ. நா. கூட்டம் ஸ்தம்பிதம்!

வாஷிங்ரன், ஒக். 20

மேற்காசியநிலைமைகுறித்து விவாதிக்க கூட்டப்பட்ட ஐ. நா.பேரவையின் சிறப்புக் கூட்டம்இஸ்ரேல்பலஸ்தீனப்பிரதிநிதிகளிடையே ஏற்பட்ட காரசாரமான வாக்கு வாதத்தால் ஒத்திவைக்கப்பட்டது.

பலஸ்தீனத்துக்கான ஐ.நா கண்காணிப்பாளர் சமர்ப்பித்த தீர்மான வரைவுகள் மீது விவாதம் நடத்த ஐ.நா. சிறப்புக் கூட்டம் அழைக்கப்பட்டிருந்தது.

பலஸ்தின ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது இஸ்ரேல் அதிக அளவு படைப்பலத்தைப் பிரயோகிப்பதாக வரைவில் குறிப்பிடப்பட்டுள்ளது குறித்து இஸ்ரேலியப் பிரதிநிதிகள் ஆட்சேபம் தெரிவித்த போது அவர்களுக்கும் பலஸ்தினப் பிரதிநிதிகளுக்கும் கடும் வாக்கு வாதம் ஏற்பட்டது.

இதனை அடுத்து கூட்டம் ஒத்திவைக்கப்பட்டது மீண்டும் பேரவை கூடும்போது ஐ நா செயலாளர் நாயகம் கோபி அனான் கலந்து கொள்வார் என்று கூறப்படுகிறது.

மேற்குக் கரை மற்றும் காஸாவில் இஸ்ரேலியப் படையினருக்கும், பலஸ்தினர்களுக்கும் இடையே சில மோதல்கள் நிகழ்ந்து வரும் போதும் வன்முறையின் வேகம் தணிந்திருப்பதாகக் கூறப்படுகிறது. (ஒ)

## சூடானில் உபஜனாதிபதி பதவி நீக்கம்

காட்டூம், ஒக்.20

சூடான் ஜனாதிபதி ஒமர் ஹசனால் பசிர், உதவிஜனாதிபதியாகப் பதவி வகித்த லெப்டினன்ட் ஜோர்ஜ் கொங் கோத் அராபை பதவி நீக்கியுள்ளார்.

பதவி நீக்கத்திற்கான காரணம் எதுவும் வெளியிடப்படவில்லை. (ஒ)

## மொண்டிநீக்ரோ தலைவர்கள் யூகோ. அதிபருடன் பேச்சு

பெல்கிரேட், ஒக். 20

யூகோஸ்லாவியாவின் புதிய அதிபராகப் பதவியேற்றுள்ள கொஸ்டுனிகா, மொண்டிநீக்ரோவின் அரசியல் தலைவர்களுடன் பேச்சு வார்த்தையில் ஈடுபட்டுள்ளதாகவும்,

இப் பேச்சுக்களில் இரண்டு சமஷ்டிக் குடியரசுகளிடையேயும் நீண்ட காலமாக நிலவிவரும் பதற்றத்தைத் தணிப்பது குறித்தும்,

யூகோஸ்லாவியாவின் முன்னாள் அதிபர் மிலோசேவிக்கின் ஆட்சிக்காலத்தில் ஏற்பட்ட பாதிப்புக்கள் குறித்தும் முக்கியமாக ஆராயப்படும் என்று கூறப்படுகிறது.

யூகோஸ்லாவியாவின் ஆட்சிக்குட்பட்ட பிரதேசமாக இருந்து வந்த மொண்டிநீக்ரோ சில வருடங்களின் முன்னர் சமஷ்டிக் குடியரசாகியது. அப்போதிலிருந்து மிலோசவிக் தலைமையிலான யூகோஸ்லாவியா மற்றும் மொண்டிநீக்ரோ இடையிலான உறவுகளில் பதற்ற நிலை இருந்து வருவது குறிப்பிடத்தக்கது. (ஒ-8)

# என்மீது தாக்குதல் நடத்தினால் விளைவுகளைச் சந்திக்க நேரிடும்!

## ஒசாமா பின்லேடன் எச்சரிக்கை!!

இஸ்லாமாபாத், ஒக். 20

தான் தங்கியுள்ள ஆப்கானிஸ்தான் மீது தாக்குதல் நடத்தினால், அதற்கான மோசமான விளைவுகளைத் தாக்குதல் நடத்தும் நாடு சந்திக்க நேரிடும் என்று இஸ்லாமிய தீவிர வாதத் தலைவர் ஒசாமா பின் லேடன் எச்சரித்துள்ளார்.

பாகிஸ்தானியப் பத்திரிகை ஒன்றுக்கு அவர் அளித்த பேட்டியிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய நாடுகள் தனது எச்சரிக்கையை கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும் என்றும் பின் லேடன் தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் யேமனில் அமெரிக்கப் போர்ப்படகு மீதான தற்கொலைத் தாக்குதலில் 9 அமெரிக்க மாலுமிகள் பலியான சம்பவத்தின் பின்னணியில் ஒசாமாபின் லேடன் இருப்பதாகவும்—

ஆகவே அவர் தங்கியுள்ள இடத்தின் மீது தாக்குதல் நடத்த அமெரிக்கா திட்டமிட்டு வருவதாகவும் செய்திகள் பரவியது குறிப்பிடத்தக்கது. (ஒ-8)

# நடிகை தபுவுடன் வேட்டையாடிய நடிகர் சல்மான்கான் மீது வழக்கு!

புதுடில்லி, ஒக். 20

உரிமம் இல்லாது துப்பாக்கிகள் வைத்திருந்ததாக பிரபல இந்தி நடிகர் சல்மான்கான் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு திரைப்பட படப்பிடிப்புக்காக ராஜஸ்தான் மாநிலம் ஜெய்ப்பூரில் தங்கியிருந்த போது, நடிகர்கள் சல்மான்கான், சயூப் அலிகான் ஆகியோர் நடிகைகள் தபு மற்றும் சோனாலி பிந்ரேயுடன்சட்டவிரோதமாக, மான்வேட்டையில் ஈடுபட்டதாகக் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

அப்போது இவர்கள் மீது 3 குற்றப் பத்திரிகைகள் தாக்கல் செய்யப்பட்டன.

தற்போது வேட்டைக்குப் பயன்படுத்தப்பட்ட இரு துப்பாக்கிகளும்சல்மான்கானுடையவை என்றும்—

அவற்றின் உரிமங்கள் கடந்த சில ஆண்டுகளாகப் புதுப்பிக்கப்படவில்லை என்றும்—

தற்போது தெரியவந்ததையடுத்து சட்ட விரோதமாகத் துப்பாக்கிகள் வைத்திருந்ததாக சல்மான்கான் மீது புதிய வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இதற்கிடையில் ராஜஸ்தானில் ஜோத்பூரில் அரிய உயிரினமான பிளாக் பொக்ஸ் எனப்படும் கரும் கொக்கு இனத்தை வேட்டையாடியதாக வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு மான் வேட்டையில் ஈடுபட்டிருந்த சமயம் நடிக, நடிகைகள் நால்வரையும் அப் பகுதியில் வசித்த மக்கள் பிடித்து பொலிஸில் ஒப்படைத்திருந்தது குறிப்பிடத்தக்கது. [ஒ-8]

## வாழ்த்துகின்றோம்

எங்கள் பாடசாலையில் கடமையாற்றி ஓய்வு பெற்ற ஆசிரியரும் பாடசாலை அபிவிருத்திச் சங்க செயற்குழு உறுப்பினரும் சமய சேவையாளருமாகிய

**திரு. சிதம்பரநாதன் திசைவீரசிங்கம் J.P**

அவர்கள் 09-10-2000 அன்று மல்லாகம் நீதிமன்றத்திலே சமாதான நீதிவானாகச் சத்தியப்பிரமாணம் பெற்றுச் சமாதான நீதிவானாக நியமனம் பெற்றமையையிட்டு மகிழ்ச்சி அடைவதோடு அவரை நாங்கள் மனமார வாழ்த்துகின்றோம்.

மேலும் அவர் தமது சமய சமூகப் பணியினைத் தொடர சுதுமலை அம்மன் அருளை வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவர் சங்கம்.
யா/சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயம்.
மானிப்பாய். (79657)

## தேவை

யாழ். நகரில் இயங்கும் தனியார் நிறுவனம் ஒன்றுக்கு பில் போடுவதற்கும், போட்டோக் கொப்பி இயந்திரம் இயக்குவதற்கும் ஆண் ஒருவர் தேவை.

அத்துடன காரியாலய உதவியாளராகப் பணி புரிவதற்கு சிறுவன் ஒருவரும் தேவை.

விரும்புபவர்கள் சுய விபரத்தை சொந்தக் கையெழுத்தில் எழுதி 31—10—2000க்கு முன் விண்ணப்பிக்கவும்.

விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:

**மே/பா உதயன், இல. 1118, யாழ்ப்பாணம்.**

(79606)

## கண்ணீர் அஞ்சலி

திரு. செ. வர்ணகுலராசா
அவர்களின் அன்புத் தந்தை

**கதிரவேலு செல்வரட்ணம்**

அவர்களின் திடீர் மறைவையிட்டு துயருறும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

கூட்டுறவு மொத்த விற்பனை
நிலையம்( .W.E)
யாழ்ப்பாணம்.

(79653)

## பாலர் விளையாட்டு விழா

நவாலி, ஒக். 20

மானிப்பாய் கியுமெடிக்கா பாலர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டுப் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணி முதல் பாடசாலை மைதானத்தில் கியுமெடிக்கா நிறுவனத் தலைவர் சாம் ராஜசூரியர் தலைமையில் நடைபெறும். (ஐ-100)

## மருந்துக்குத் தட்டுப்பாடு

நெல்லியடி, ஒக். 20

மூட்டுவாதக் காய்ச்சல் நோயாளிகளுக்குரிய 'பென்சத்தொயின்' ஊசிமருந்துக்கு மந்திகை மருத்துவமனையில் பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றது.

கடந்த புதன்கிழமை ஆஸ்பத்திரியில் நடைபெற்ற கிளினிக் சிகிச்சைக்கு வந்த பல நோயாளிகள் குறித்த ஊசி மருந்து இன்றி ஏமாற்றத்துடன் வீடு திரும்பினார்கள்.

இதேவேளை —

இந்த ஊசிமருந்து தனியார் டிஸ்பென்சரிகளிலும் முடிவடைந்திருப்பதனால் நோயாளிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். (ஐ-109)

## இரத்தம் வழங்க கோரிக்கை

நெல்லியடி, ஒக். 20

மந்திகை இரத்த வங்கியில் இரத்தத்திற்கு பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றது. இதனால் சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்படும் கர்ப்பிணித் தாய்மார்களும் யுத்த அனர்த்தங்களினால் காயப்படும் நோயாளிகளும் பெரும் உயிராபத்தை எதிர்நோக்கி வருகின்றார்கள்.

இரத்தம் வழங்க விரும்புவோர் மந்திகை மருத்துவமனை இரத்த வங்கியுடன் தொடர்பு கொள்ளுமாறு இங்கு பணிபுரியும் பிரெஞ்சு மருத்துவக் குழுவின் சத்திர சிகிச்சை நிபுணர் டாக்டர் திருமதி லிடியா பஜோக் அவசர வேண்டுகோள் விடுத்துள்ளார். (ஐ-109)

## நினைவஞ்சலி

**5 ஆம் வருடம்** **31 ஆம் நாள்**





அமரர்
**சுப்பிரமணியம் நாகலிங்கம்**
மண்ணில் 09-04-1921 விண்ணில் 26-10-1995

திருமதி
**நாகலிங்கம் நாகேஸ்வரி**
மண்ணில் 03-02-1931 விண்ணில் 20-09-2000

"உயிர்ப்பும் உயிரும் நானே! என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்"

நெஞ்சம் துடிக்க நினைவெல்லாம் நீராகத்
தஞ்சம் வேறின்றித் தவிக்கின்றோம் — விழித்துபார்
கொண்டோம் அரசமணிக்கோ தாய் — உமையிழந்து
மாண்டோய்ந் தழுகின்றோம் நாம்.

— குடும்பத்தினர்

192/1, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம். (79656)

## கண்டெடுக்கப்பட்டுள்ளது

9 - 10 - 2000 அன்று நீர்வேலிப் பகுதியில் கைக்கடிகாரம் கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் ஆதாரம்காட்டி

சூரன் செல்வராசா,
நாவலடி, கோப்பாய் மத்தி,
மாரியம்மன் வீதி

எனும் முகவரியில் பெற்றுக் கொள்ளவும். (79645)

## JAFFNA STUDIO

எமது ஸ்தாபனத்தால் எடுக்கப்பட்ட மகாபொல புலமைப் பரிசில் படங்களை கீழ் உள்ள முகவரியில் பெற்றுக் கொள்ளலாம்.

ஸ்ரீவல்லிபுரா போட்டோ,
546, பருத்தித்துறை வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.
(79648)

ஸ்கந்தவரோதயக் கல்லூரி

## தரம் 6 புதிய மாணவர் அனுமதி - 2001

கல்லூரி அலுவலகத்தில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்று 15—11—2000 இற்கு முன்பாக எமக்குக் கிடைக்கக் கூடியதாக விண்ணப்பிக்கவும்.

★ புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற உச்ச வறுமையுடைய மாணவர்களுக்கு எமது கல்லூரியில் மேலதிக நிதியுதவி அளிப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அதிபர்,
ஸ்கந்தவரோதயக் கல்லூரி,
கந்தரோடை, சுன்னாகம்.
(79647)

யா/கொழும்புத்துறை
**துரையப்பா வித்தியாலயம்**

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

2000 ஆம் ஆண்டில் நடைபெற்ற
தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில்
சித்தியடைந்த

**செல்வி சி. விஜேந்தினி - 135 புள்ளிகள்**

பெற்ற மாணவியைப் பாராட்டி வாழ்த்துவதுடன் இடம்பெயர்ந்த நிலையிலும் இம்மாணவி சித்தியடைய ஊக்கமளித்து உறுதுணையாக நின்ற அதிபர், ஆசிரியர்கள் அனைவரையும் உளமார வாழ்த்துகிறோம்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்
(79660)

## செய்முறைப் பரீட்சை - 2000

யா/மட்டுவில் தெற்கு, சரஸ்வதி கனிஷ்ட வித்தியாலயம்,
யா/ மட்டுவில் தெற்கு அ.மி த.க. பாடசாலை,
யா/ உடுவில் மான்ஸ் மகா வித்தியாலயம்

ஆகிய பாடசாலைகளைச் சேர்ந்த மாணவருக்குரிய க. பொ. த. சா/த விவசாயம், மனைப்பொருளியல், சங்கீதம் ஆகிய பாடங்களுக்கான செயல்முறைப் பரீட்சை 23-10-2000 திங்கட்கிழமை யா/ உடுவில் மான்ஸ் மகா வித்தியாலயத்தில் நடைபெற இருப்பதால் சகல மாணவர்களையும் காலை 8.30 மணிக்கு சமுகம் தருமாறு மேற்படி பாடசாலை அதிபர்கள் கேட்டுக் கொள்ளுகிறார்கள்.

(கி/13459)

## கண்ணீர் அஞ்சலி

**அமரர் தம்பு தவராஜா**

(ஓய்வுபெற்ற களஞ்சிய பொறுப்பாளர் கட்டடத் திணைக்களம்)

மல்லாகம் சாளம்பை முருகமூர்த்தி ஆலய பரிபாலன சபை உறுப்பினரும் கோட்டைக்காடு மல்லாகத்தை வதிவிடமாகக் கொண்டவருமான தம்பு தவராஜா அவர்கள் 18—10—2000 அன்று புத்தளத்தில் காலமானதையிட்டு அன்னாருக்கு எமது இதய பூர்வ அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தினைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

மல்லாகம் சாளம்பை முருகமூர்த்தி
ஆலய பரிபாலன சபையினரும்,
இந்து இளைஞர் தொண்டர் சபையும்.
கோட்டைக்காடு, மல்லாகம். (79646)

## இமாலயத்தில் மலிவு விற்பனை

**26.10.2000 வரை**

இல.32. கஸ்தூரியார் வீதியில் இயங்கிய

**கணபதி சூ சென்றர்**

**69A, நவீன சந்தை உள்புறத்தில்-**

| | |
|---|---|
| ஆண்கள் கிற்றோ சான்றில் | 600.00 |
| ஆண்கள் கிற்றோ பச்சை, நீலம் | 330.00 |
| பெண்கள் கிற்றோ | 230.00 |
| பேபி கிற்றோ | 190.00 |
| மியூசிக் சூ பேபி | 160.00 |
| பெண்கள் இந்தியன் சான்றில் | 150.00 |
| பெண்கள் இந்தியன் சிலிப்பர் | 90.00 |
| D.S.I இல. 6,7,8,9,10 | 50.00 |

பெற்றுக்கொள்ள:- **கணபதி சூ சென்றர்**

இல. 69A, நவீன சந்தை உள்புறம், (ராசி சில்க்ஸ் அருகில்) யாழ்ப்பாணம்.

(79651)



# UNIVAC

*College of Computer Information Technology*
(British ACP Regonized Training Centre)

**Exam**

DCIT, MS Office மாணவர்களிற்கான MS Word 2000 Exam **கொக்குவில் இந்துக் கல்லூரியில்** 22.10.2k 9.30 மணிக்கு நடைபெறும்.

**New Batches**

Diploma In Microsoft Office 2000 புதிய பிரிவுகள் ஆரம்பமாகவுள்ளன. மாணவர்கள், உத்தியோகத்தர்கள், வங்கி ஊழியர்கள், ஆசிரியர்கள் அவர்களுக்கு ஏற்ற வகையில் பிரத்தியேக வகுப்புக்கள் நடைபெறும்.

**Each Course fees only 1000/=**

விண்ணப்ப முடிவு திகதி - 30.10.2k

DIRECTOR
UNIVAC

K.K.S.Road,
Narchimar Kovil,
Jaffna.

(79652)


## தச்சன்தோப்பு சிந்தாமணி விநாயகர் ஆலயம்
### கரவெட்டி

### வள்ளியம்மன் திருமணப்படனமும் கந்தபுராணப் பூர்த்தியும்

அன்புடையீர்!

எதிர்வரும் 22.10.2000 ஞாயிற்றுக்கிழமை வள்ளியம்மன் திருமணப்படனமும் கந்தபுராணப் பூர்த்தியும் சிறப்பாய் நடந்தேற இறையருள் வேண்டுகிறோம்.

அன்றைய தினம் காலை 6மணிக்கு பூசை ஆரம்பமாகும். காலை 7.00 மணியளவில் வள்ளியம்மன் திருமணப்படனம் ஆரம்பமாகி பிற்பகல் 4.00 மணிக்கு வசந்த மண்டபப் பூசை நடைபெற்று முருகப்பெருமான் வள்ளிதெய்வானை சமேதராக எழுந்தருளி அருள்பாலிப்பார்.

பௌராணிகர்களும் ஆர்வலர்களும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

*அனைவரும் வருக! முருகன் அருள் பெறுக!!.*

(C/13468) ஆலய பரிபாலன சபை

## 31 ஆம் நாள் நெஞ்சகலா நினைவும் நன்றி நவிலலும்



**அமரர் வேலன் பசுபதி**

(ஊழியர், காங்கேசன்துறை மார்புநோய் வைத்தியசாலை)

**தோற்றம் 25.10.1924** **மறைவு 20.09.2000**

அன்பும் பாசமும் நிறைந்த நீங்கள்
இவ்வுலகை விட்டுப்பிரிந்த மர்மம்தான் என்ன?

அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதுடன், இன்று (20.10.2000) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் மறைவு கேட்டு எமதில்லம் நாடி வந்து, எம்துயரில் பங்கு கொண்ட அன்புள்ளங்களுக்கும் கடிதம் மூலம் அனுதாபம் தெரிவித்தவர் களுக்கும் மலர்வளையங்கள் சாத்தி அஞ்சலி செய்தவர்களுக்கும் மற்றும் பல வழிகளிலும் இறுதிக்கிரியைகளின் போது உதவிய எமது சனசமூக நிலைய உறுப்பினர்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

*உடுவில் நோட்,
2ஆம் ஒழுங்கை,
மானிப்பாய்.* **குடும்பத்தினர்**

(C/13476)

## மாடுகளுக்கு நோய்த் தடுப்பூசி

யாழ்ப்பாணம்,ஒக.20

யாழ்.கால்நடை வைத்தியர் பிரிவுக்கு உட்பட்ட பிரதேசங்களில் மாடுகளுக்கு தடுப்பூசி ஏற்றப்படுகின்றது.

மழை காலத்தில் மாடுகளுக்கு நோய் பரவாமல் தடுப்பதற்காகவே மேற்படித் தடுப்பூசி ஏற்றப்படுகின்றது.

கால்நடைகளை வளர்ப்பவர்கள் கால்நடை வைத்தியசாலையுடன் தொடர்புகொண்டு தடுப்பூசியைப் போட்டுக் கொள்ளலாம் என்றும் இதன் மூலம் நோய் பரவாமல் தடுக்கமுடியும் என்றும் கால்நடை வைத்தியசாலை அத்தியட்சகர் மு.தங்கராசா தெரிவித்தார். (இ-ரி)

## கட்டாக்காலி கால்நடைகளால் பாதிப்பு

சண்டிலிப்பாய்,ஒக.20

உடுவில் கமநலச் சேவை கேந்திர நிலையப் பிரதேசத்திலுள்ள விவசாய சம்மேளனங்கள் தத்தமது பிரிவில் கட்டாக்காலி ஆடு, மாடுகளின் தொல்லையைக் கட்டுப்படுத்துவதற்கு உடன் நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கட்டாக்காலி ஆடு, மாடுகளைப் பிடிப்பதற்கு பிடிகாரர்களை நியமிக்குமாறும் கேந்திர நிலைய பெரும்பாக உத்தியோகத்தர் விவசாய சம்மேளனங்களைக் கடிதமூலம் கேட்டுள்ளார். (ஐ-135)

## சைவசித்தாந்தம்.....

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மார்க்கம்இதனைச் சகமார்க்கம் என்பர். சுந்தரமூர்த்தி நாயனாரின் வாழ்வு இதற்கு சான்றாகும் இவர்கள் அடையவுள்ளது சாரூப முத்தியாகும். இதன் பொருள் இறைவனோடு இருத்தல்.

ஞான பாதத்தில் நிற்போர் அடையும் முத்தி சாகித்திய முத்தியாகும். இரண்டறக் கலத்தல். அப்புடன் உப்புப்போல். இந்நிலைக்குரியவராக 'மாணிக்க வாசகர் உள்ளார். சிவஞானபோதத்தில் இதன் விளக்கம் பேசப்படுகிறது.

முப்பத்தியாறு தத்துவங்களையும் வேறாகக் காணும் நிலை தத்துவ ரூபம் எனப்படும். மாயா காரியங்களென்று தன்னறிவிலே காண்பது தத்துவ தரிசனம். சுட்டறிவை நீக்கி எங்கும் நிறைவாய் நித்தியமாய் அறிகின்ற நிலை. தத்துவ சுத்தி தன்னறிவு கொண்டு அறிந்ததாக இல்லாது சிவனருளாலே அவன் அருளைக் காணின் அறிந்ததாக உணர்வது ஆன்ம ரூபம் ஆன்ம தரிசனமாகும். ஆன்மா அருள்வயப்பட்டு நிற்றல் ஆன்ம சுத்தியாகும்.

ஆன்ம சுத்தியடைந்த பின் ஞானத்திற்கு முதலாகிய நேயம் தோன்றும். இதன் பயனாக தன் செயலாற்றுத் தானற்று சிவத்தினொடு ஏகநாகி நிற்கும் பக்குவமுள்ள ஆன்மாக்களுக்கு இறைவன் குருவாக வந்து ஞானத்தை உணர்த்துவான் என்பது சைவ சித்தாந்தம் காணும் கருத்து. இறைவனை நோக்கி உயர்ந்திருக்கும் நிலையில் இருந்து வழுவாமல் இருப்பதற்கும் பஞ்சாட்சரஜெபம் இன்றியமையாதது.

### வீடு பேறு

சைவ சித்தாந்தம் கூறும் உயர்ந்த நிலை வீடுபேறாகும். வீடு என்பது விடு என்ற அடியில் இருந்து விடுதல். அதாவது பற்றுக்களை விடுதல், பாசநீக்கம் என்பனவாகும். ஆன்மாக்களின் செயல் எல்லாம் அவன் செயல் என்று நினைத்ததோடு நான், எனது என்ற நிலையை நீக்கி இறைபணியிலே சலியாது நிற்றல் வேண்டும். சிவப்பேறு அடையும் நிஷ்டை நிலை பதினோராவது சித்திரத்தில் விளக்கப்படுகின்றது.

பசு ஞானம் நீங்கி பதிஞானம் பெற்று ஆன்மா இறைவனோடு ஒன்றித்து அவன் திருவடி நிழலை அணைந்து நிற்கும்நிலையே இங்கு காட்டப்படுகின்றது. அத்துவாதம் என்பது ஒரு பொருளைக் காட்டும் போது காணும் ஆன்மாவும் காட்டும் கண்ணும் ஒருங்கிணைந்து நிற்பது போல முதல்வனொடு ஒருங்கிணைந்த ஆன்மா ஆனது நிற்றலே இதனையே அத்துவிதம் என சைவசித்தாந்தம் எடுத்துக்காட்டுகின்றது. ஒன்றுமில்லா இரண்டு மில்லாது பதியோடு இரண்டறக்கலந்த நிலையாகும். சைவ சித்தாந்தத்தின் முடிந்த முடிவே இதுவாகும்.



# R.G.L. BEAUTY PARLOUR

**துணியில் வர்ணம் தீட்டுதல், மணமகள்அலங்காரம், மருதாணி வர்ணம் தீட்டுதல், முக ஒப்பனை, மயிர் சுருட்டுதல், பொண்டன் திருமணக் கேக் ஐசிங், பிறந்த தின கேக் ஐசிங் என்பன ஓடருக்குச் செய்து கொடுக்கப்படும்.**

**R.G.L. BEAUTY PARLOUR,**
**55,சிவன் புதுவீதி, நல்லூர்.**

(79670)


# கைலாஸ நாதாஞ்ஜலி



**07.08.2000 அன்று ஆஸ்திரேலியாவில் அமரத்துவமடைந்த பேராசிரியர் இலக்கிய கலாநிதி பிரம்மஸ்ரீ கா.கைலாஸநாதக் குருக்கள் அவர்களது ஆத்ம சாந்திப் பிரார்த்தனை, நூல்களின் வெளியீடு என்பன இடம் பெறவுள்ளன.**

இடம் - நல்லூர் சிவன் கோவில் மண்டபம்

காலம் - 22.10.2000 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணி

தலைவர் - பேராசிரியர் கலாநிதி
**பிரம்மஸ்ரீ ப.கோபாலகிருஷ்ணஐயர்.**
தலைவர், இந்துநாகரிகத்துறை,
பல்கலைக் கழகம் - யாழ்ப்பாணம்
- நியந்தா

பிரார்த்தனையுரை :- **சிவஸ்ரீ தா.மஹாதேவக் குருக்கள்**
(அதிபர், தர்மசாஸ்தா குருகுலம்)
**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள்**
(நல்லை ஆதீன முதல்வர்)
**கலாநிதி .வண.ஜெபநேசன்**
(பேராயர், தென்னிந்திய திருச்சபை)
**திரு.ஆறு.திருமுருகன்** B.A.

அஞ்சலியுரை - **பேராசிரியர் கலாநிதி அ.சண்முகதாஸ்**
(பீடாதிபதி, உயர்பட்டப்படிப்புகள் பீடம்,
பல்கலைக் கழகம், யாழ்ப்பாணம்)

*** என் சரிதம் (கா.கைலாஸநாதக் குருக்கள் எழுதியது), கைலாஸ நாதாஞ்ஜலி** என்பனவும் இன்னும் பல நூல்களும் அன்னாரின் நினைவாக வெளியிடப்படவுள்ளன.

* பேராசிரியர் கைலாஸநாதக்குருக்கள் ஞாபகார்த்த நிதியம் ஆரம்பித்து வைக்கப்படும்.

* நியந்த்ரியினால் நடத்தப்பட்ட வைதீக, ஆகம சைவசமய அறிவு, கோலப்போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்கள் வழங்குதலும் 1999ம் ஆண்டில் நடைபெற்ற 5ஆம் ஆண்டுப் புலமைப் பரிசில் , க.பொ.த சாதாரண, உயர்தரப் பரீட்சைகளில் சித்தியடைந்த மாணவர்களிற்கான நியந்த்ரியின் வருடாந்த பரிசில் வழங்குதல் வைபவமும் இடம்பெறும்.

*இந்த அஞ்சலி நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து மதிய போசனத்திலும் பங்குகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.*

*ந.சதாசிவ ஐயர்
செயலர் - நியந்த்ரீ*

**ஸ்ரீ.கிருஷ்ணானந்தசர்மா
சிவன் தேவஸ்தானம்**

(C/13474)

# கண்ணீர் அஞ்சலி

யா/புங்குடுதீவு மகாவித்தியாலயத்தில் கடமையாற்றும் திரு.நடராஜபிள்ளை திருஞானசம்பந்தன் அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி நடராஜபிள்ளை ஜெயலெட்சுமி**

**அவர்களின் மறைவையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.**

அதிபர்,ஆசிரியர்கள்,மாணவர்கள்
யா/புங்குடுதீவு மகாவித்தியாலயம்

(79677)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் கண்ணீர் அஞ்சலியும்

**கடந்த 20.09.2000 அன்று இயற்கை எய்திய**

**அமரர் வேலன் பசுபதி**

**(ஊழியர், காங்கேசன்துறை மார்பு நோய் வைத்தியசாலை) அவர்களின் மறைவையிட்டும், துயருறும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்கிறோம்**

வள்ளுவர் சனசமூக நிலையம்,
*V.C.C., மாவிட்டபுரம்,
தெல்லிப்பழை.*

(C/13475)

## புதிய அமைச்சரவையில்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

* பட்டி வீரக்கோன் - நீதி.
* இந்திகா குணவர்த்தன : உயர்கல்வி, தகவல், தொழில்நுட்ப அபிவிருத்தி.
* ஆறுமுகம் தொண்டமான் - தோட்ட வீடமைப்புக் கட்டமைப்பு, கால்நடை அபிவிருத்தி.
* ரவூப் ஹக்கீம் - உள்நாட்டு, வெளிநாட்டு வர்த்தக வாணிபம், முஸ்லிம் சமய விவகாரம், கப்பல்துறை அபிவிருத்தி.
* டக்ளஸ் தேவானந்தா - வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு, வடக்கு - கிழக்கு தமிழ் அலுவல்கள்.
* தினேஸ் குணவர்த்தனா - போக்குவரத்து.
* விஜேபால மெண்டிஸ் - இலாகா இல்லாத அமைச்சு.
* றொனி டி மெல் - துறைமுக அபிவிருத்தி, தெற்கு அபிவிருத்தி.
* மஹிந்த ராஜபக்ஷ - கடற்றொழில், நீரியல் வளம்.
* ரிச்சர்ட் பத்திரான - பொது நிர்வாக, உள்நாட்டு அலுவல்கள், நிர்வாகச் சீரமைப்பு.
* அமரசிறி தொடங்கொட - தொழில்பயிற்சி.
* நிமால் சிறிபால டி சில்வா - தபால், தொலைத் தொடர்புகள்.
* மங்கள சமரவீர - நகர அபிவிருத்தி, நிர்மாணம், பொது வசதிகள்.
* அனுருத்த ரத்வத்த - மின்சக்தி, எரிபொருள்.
* ஏ.எச்.எம்.பௌஸி - நெடுஞ்சாலைகள்.
* லக்ஷ்மன் கதிர்காமர் - வெளிவிவகாரம்
* பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் - அரசமைப்பு விவகாரம், கைத்தொழில அபிவிருத்தி.
* ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே - விமானப் போக்குவரத்து,விமானநிலைய அபிவிருத்தி.
* மைத்திரிபால சிறிசேன - மகாவலி அபிவிருத்தி.
* அலவி மௌலானா - தொழில்.
* நந்தமித்ர எக்கநாயக்க - மாகாண சபைகள், உள்ளூராட்சி சபைகள்.
* டபிள்யூ டி.ஜே.செனவிரத்ன - சுகாதாரம்.
* சுமிதா ஜெயசேன - மகளிர் விவகாரம்.
* மஹிந்த விஜயசேகர - வனவளம் சுற்றாடல்.
* சரத் அமுனுகம - நீர்ப்பாசன, நீர்வள முகாமைத்துவம்.
* றெஜி ரணதுங்க - உணவு மற்றும் சந்தைப்படுத்தல் அபிவிருத்தி.
* எச்.ஆர்.சோமசிங்க - கூட்டுறவு அபிவிருத்தி.
* எம்.சி.கோபல்லாவ - கலாசார விவகாரம்.
* மில்றோய் பெர்னாண்டோ - சமூக சேவைகள், மீனவ சமூக வீடமைப்பு அபிவிருத்தி.
* ஜீவன் குமாரதுங்க - இளைஞர் விவகாரம்.
* பவித்திரா வன்னியாராச்சி - திட்ட அமுலாக்கல்.
* லக்ஷ்மன் கிரியல்ல - சுற்றுலா, விளையாட்டுத் துறை.
* றெஜினோல்ட் குரே - இன விவகார, தேசிய நல்லிணக்கம்.
* சாலிந்த திஸநாயக்க - காணி அபிவிருத்தி, சிறு விவசாய ஏற்றுமதி.
* திஸ்ஸ கரலியட்ட - சுதேச மருத்துவம்.
* அனுர பிரியதர்சன யாப்பா - தகவல் தொழில்நுட்பம், ஊடகத்துறை
* மகிபால ஹேரத் - கிராமிய கைத்தொழில் அபிவிருத்தி
* சுசில் பிரேம ஜயந்த - கல்வி.
* பேராசிரியர் லெஸ்லி குணவர்த்தன - விஞ்ஞான தொழில்நுட்பம்.
* பேரியல் அஷ்ரப் - கிழக்கு மாகாண கிராம வீடமைப்பு, புனர்வாழ்வு, அபிவிருத்தி.

## நாகர்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நொறுங்கியது.

அந்தக் ஹெலியில் இருந்த இரண்டு விமானிகளும், மூன்று உதவியாளர்களும் உயிர்தப்பினர் என்றும் இராணுவப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார். (அ-3)

## கொழும்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முக்கிய அமைச்சர் அல்லது முகக்கிய பிரமுகர் ஒருவரைக் குறிவைத்தே இவர்கள் காத்து நின்றுள்ளனர் என்றும்- சிரேஷ்ட பொலீஸ் அதிகாரி ரியன்ஸி பெரேரா தெரிவித்தார். (இ-3-8-9)


மிலேனியம் ஆண்டின் முதல் கணனிப்பட்டதாரி

கொழும்புப் பல்கலைக்கழகத்தினால் வெளிவாரியாக நடாத்தப்படும் தகவல்தொழில் நுட்பகணனிப்பட்டப்படிப்பிற்கென (BIT) பதிவினை மேற்கொண்ட அனைவருக்குமான விரிவுரைகள் அனைத்தும் எமது நிறுவனத்தில் எதிர்வரும் 21.10.2000 சனிக்கிழமை காலை 08.00 மணிமுதல் ஆரம்பமாகவுள்ளது. இப் பட்டப்படிப்பிற்கான விரிவுரைகள் யாவும் கீழ்வரும் நேரசூசியின் படி எமது நிறுவனத்தில் நடைபெறும்.

08.00 a.m. - Mathematics for Computing -I
09.00 a.m. - Fundamentals of Computer System & PC Applications.
10.00 a.m. - Systems Analysis & Desigen.
11.00 a.m. - Fundamentals of Programming.
12.00 p.m. - Lunch Time
01.00 p.m. - Fundamentals of Programming.
02.00 p.m. - Mathematics for Computing -I
03.00 p.m. - Systems Analysis & Desigen.
04.00 p.m. - Fundamentals of Computer System & PC Applications.

IBMS
Institute of Business Management Studies
No. 701, K.K.S Road, Jaffna.
N.G


## ஓய்வூதியம் பெறாதோர் விவரம்

சாவகச்சேரி இலங்கை வங்கியில் கடந்த மே மாத ஓய்வூதியம் பெற்றுக கொள்ளாதவர்களின் விவரங்கள் வங்கியினால் தென்மராட்சி பிரதேச செயலகத்திற்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளன. (ஜ-117)

## தமிழர்கள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தோட்டத்துறை உட்கட்டமைப்பு கால்நடை அபிவிருத்தித்துறை அமைச்சராக ஆறுமுகம் தொண்டமானும்- நேற்று அலரிமாளிகையில் ஜனாதிபதி சந்திரிகா முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்தனர். (அ)


PERSONAL CLASSES

Inorganic Chemistry
ஆரம்பம் :- 20.10.2k
4.30pm

Chemistry - அன்பு

இடம்:-
நாவலர் கல்வி நிலையம்,
ஆனைப்பந்தி. (79625)



எமது புதிய வீடியோ CD வெளியீடுகள்

* வானவில் * தொடுவானம்
* பிரியாத வரம் வேண்டும்
* நாகதேவதை

பிரமிட் ஒறிஜினல் வீடியோ CD வெளியீடு

* சிம்மாசனம் * குபேரன்
* பட்ஜெட பத்மநாபன் * அப்பு

வீடியோ CDகளை வாடகைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

வீடியோ எக்கணமி மியூசிக் கோணர்
297, பலாலி வீதி,
பரமேஸ்வராச் சந்தி.

கிளைகள் :-
* மார்க்கற் - சங்கானை.
* நாச்சிமார்கோவிலடி,
(79678) யாழ்ப்பாணம்.



சித்தி விநாயகர் கல்வி நிலையம்

K.K.S. வீதி, மல்லாகம்.
வினாவிடை வகுப்புகள
ஆரம்பம் 21.10.2000

இந்துநாகரிகம்
திரு. S. சுரேஸ்
Sat. Sun. 10.00 - 11.00 (ப. நே.)

நாடகமும் அரங்கியலும்
திரு. I. சக்தியா
Sat. Sun. 9.00 - 10.00 (ப. நே.)
(C/13460)



தேவை

யாழ். நகரில் இயங்கும் பிரபல்யமான கணனி நிறுவனம் ஒன்றிற்கு கணனித் துறையில் Type Setting அனுபவமுள்ள பெண் தேவை. மூன்று மாத கால மேலதிக பயிற்சி வழங்கப் படும். 25.10.2000 இற்கு முன் விண்ணப்பிக்கவும்.

குறிப்பு:-
செய்முறைப் பரீட்சை மூலம் தெரிவு செய்யப்படுவர்.

தொடர்புகளுக்கு:-
விள.இல. 1120
மே/பா உதயன். (C/13473)


## ரெலோவின்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வளைக்கப்பட்டு அங்கிருந்த ஆயுதங்கள் எடுத்துச் செல்லப்பட்டுள்ளன.

மன்னாரில் உள்ள ரெலோ முகாமில் ஆயுதங்களை எடுத்துச் சென்ற படையினர் அங்கு பாதுகாப்பு சாவடி ஒன்றையும் அமைத்துள்ளனர்.

யாழ்ப்பாணத்திலும் கொழும்பிலும் உள்ள ரெலோ அலுவலகங்களில் ஆயுதம் எதுவும் கிடையாது என்றும் ஆனால் படையினர் அங்கு செல்லவில்லை என்றும் திருகோணமலையில் உள்ள ரெலோ அலுவலகத்துக்கு வந்த படையினர் அங்கிருந்து ஒரு துப்பாக்கியை மட்டும் எடுத்துச் சென்றனர் என்றும் ரெலோ முதல்வர் என்.சிறிகாந்தா நேற்று இரவு தெரிவித்தார்.

படையினரின் இந்த நடவடிக்கையை ரெலோ முதல்வர் வன்மையாகக் கண்டித்தார். ரெலோவில் உள்ள முக்கிய உறுப்பினர்களின் பாதுகாப்புக்காக மிகக் குறைந்த அளவு ஆயுதங்களே முகாம்களில் இருந்தன என்றும் -

அரசின் நடவடிக்கை ஒரு பழிவாங்கல் நடவடிக்கை என்றும் ரெலோ முதல்வர் குற்றஞ்சாட்டினார். (இ-164)

## பி.பி.ஸி.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டிருந்த வேளை திடீரென அங்கு துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன. அதன் பின்னர் கிரனேட் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

தலையிலும், பிடரிப்பகுதியிலும் படுகாயமடைந்த நிமலராஜன் அந்த இடத்திலேயே உயிரிழந்தார்.

படுகாயமடைந்த அவரது தந்தையான சங்கரப்பிள்ளை மயில்வாகனம் (வயது 65), தாயாரான லில்லி மயில்வாகனம் (வயது 62), மருமகனான ஜெகதாஸ் பிரசன்னா (வயது 11) ஆகியோர் யாழ்.ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தந்தையார் மயில்வாகனத்தின் நிலை மோசமாக இருந்தது என்றும்-

மருமகனின் ஒரு கால் துண்டிக்கப்பட்டிருந்ததாகவும் - ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

இரண்டு பிள்ளைகளுக்குத் தந்தையான நிமலராஜன் (வயது 35) பி.பி.ஸி.செய்திநிறுவனம் உட்பட பல சர்வதேச செய்திநிறுவனங்களுக்கும், கொழும்பில் இருந்து வெளிவரும் தமிழ், சிங்களப் பத்திரிகைகளுக்கும் செய்தியாளராகப் பணியாற்றினார். இவர் வடஇலங்கை பத்திரிகையாளர் சங்கத்தின் செயலாளரும் ஆவார்.


கணக்கீடு

திரு.பாலவாசன் B.B.A.(F.M.Spl)

| | | |
|---|---|---|
| A/L 2002 பிரிவு I பிரிவு II | SAT, SUN 7 - 8 11 - 12 | வங்கிக்கணக்கு இணங்கக்கூற்று |
| A/L 2001 | 12 - 1 | ஒற்றைப்பதிவு |

ஆரம்பம்: 21.10.2k SATURDAY

விக்னா கல்வி நிறுவனம்
(79644)



பாராட்டி வாழ்த்துகின்றோம்

யாழ் கல்வி நிலையம்

மானிப்பாய் வீதி, ஆறுகால்மடம்.

மிலேனியம் ஆண்டுப் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள்.

| பெயர் | முகவரி | புள்ளி |
|---|---|---|
| 1. மயில்வாகனம் கபிலன் | சுதுமலை வடக்கு | 177 |
| 2. பெரியசாமி கிருஷ்ணபிரியா | 875, ஆஸ்பத்திரி வீதி | 161 |
| 3. யோகநாதன் றஜீகன் | 185/1, கில்னர் லேன் | 160 |
| 4. திருச்செல்வன் கணநீசன் | பொற்பதி வீதி | 156 |
| 5. நிர்மலநாதன் சாமினி | ஆறுகால்மடம் | 155 |
| 6. சிவகுமாரன் றஜீபன் | சுதுமலை தெற்கு | 155 |
| 7. பாலச்சந்திரன் கஜந்தன் | கொக்குவில் மேற்கு | 153 |
| 8. தங்கராசா அஜித்சன் | கொக்குவில் மேற்கு | 147 |
| 9. முருகவேல் மாதங்கி | சங்கரத்தை | 147 |
| 10. தெய்வேந்திரம் நவீனன் | ஆனைக்கோட்டை | 145 |
| 11. கங்காதரன் டிலான் | ஆறுகால்மடம் | 142 |
| 12. தேவதாசன் ஆவேமரியா | 18, இராசாவின் தோட்ட லேன் | 137 |

எமது கல்வி நிலையத்தில் ஊக்கமுடன் பயின்று புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மேற்படி மாணவர்களை வாழ்த்துவதோடு அவர்கள் பல்கலையும் பெற்று மென்மேலும் சிறப்புற்றிட இவ்வேளையில் வாழ்த்தி நிற்போர்.

மானிப்பாய் வீதி,
ஆறுகால்மடம்.

யாழ் கல்வி நிலைய
நிர்வாகி, ஆசிரியர்கள்,
மாணவர்கள்.

அனுசரணை வழங்குவோர்:-

சிவா நறுமணப் பூங்கா

288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(79662) தொலைபேசி - 2567



வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்பாள்

கேதார கௌரி விரத அறிவித்தல்

கௌரி விரத நிறைவு நாளான எதிர்வரும் 27.10.2000 வெள்ளிக்கிழமை அன்று பி.ப. 2.06 மணியுடன் அமாவாசை முடிவடைவதனால் வழமையாக பிற்பகலில் நடைபெற்ற கௌரி திருவிழா இம்முறை காலையில் நடைபெறும்.

உதய பூஜை காலை 7.00 மணி
கும்ப பூஜை காலை 7.30 மணி
வசந்த மண்டப பூஜை காலை 8.30 மணி

Note:
பி.ப. 2.06 மணியுடன் காப்பு வழங்கல் முடிவடையும்.

(79641) - தேவஸ்தானம்


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 20.10.2000 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.